# விடுதலைப்புலிகள்

குரல்: 70 | 1 - 15 ஆடி 1996 | அன்பளிப்பு: 5/-



உள்ளே

- அமெரிக்கா நடுநிலைமையைக் கடைப்பிடிக்க வேண்டும்!
- பொது நிர்வாகத்தைச் சீர்குலைப்பது விடுதலைப் போருக்கு அவசியமா?
- அழிவுறும் உல்லாசப் பயணத்துறை: நலிவுறும் பொருளாதாரம்!
- வஞ்சிக்கப்பட்ட தமிழர்: வாக்குறுதிகளும் சூழ்ச்சிகளும்!
- வந்த பகைவிரட்டி வரலாற்றை வெல்வோம்!


# குடாநாட்டு முனையில் போர் தீவிரமாகிறது!

அரசியல் - இராணுவ ஆய்வாளர்கள் கருதியது போலவே, குடாநாட்டில் போர் ஒரு தீவிரத்தன்மையை அடைந்துவருகின்றது.

சிங்கள அரசாங்கத்தின் குடாநாட்டு நிர்வாக இயந்திரத்தைக் குறிவைத்தும் -

அது செயற்படுவதற்குப் பாதுகாப்பாக இயங்கி, சிங்கள அரசாங்கத்தின் ஆளுகையைக் குடாநாட்டில் நிலைநாட்டியும்வரும் அதன் இராணுவ இயந்திரத்தைக் குறிவைத்தும் -

அதன்மூலமாக, குடாநாட்டுக் களத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வஞ்சகத்தனமான அரசியல் திருவிளையாடலை முறியடிப்பதற்குமான போர் முனைப்படைந்துவருகின்றது.

யாழ் மாவட்டம் தமது படைகளின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதாகவும், மீண்டும் அங்கு தமது ஆட்சி நிர்வாகம் நிறுவப்பட்டு - எவ்வித இடையூறுகளையும் கடந்து நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், அரசாங்கக்காரர்கள் பிரமாதப்படுத்திவரும் வேளையில் -

ஸ்ரான்லி வீதித் தாக்குதலும் சரசாலைத் தாக்குதலும் மட்டுமன்றி, படையினருக்கு உயிர் இழப்புகளையும் உடைமையிழப்புக்களையும் ஏற்படுத்திய பல சிறுதாக்குதல்களும்-தொடர்ச்சியாக நிகழ்ந்துவருகின்றன.

இறுக்கமாகப் போடப்பட்டுள்ள உருக்கு வளைய ( Steel ring ) பாதுகாப்பு வியூகங்களுக்கு உள்ளேயே நிகழ்ந்துவரும் இவ்வாறான சம்பவங்கள், குடாநாட்டுக் களநிலையில் ஏற்படத் தொடங்கியுள்ள மாற்றத்தினையே காட்டுகின்றன.

பல்லாயிரம் வீரர்களைக்கொண்ட படையமைப்பும், பலநூறு 'முகவர்களைக்கொண்ட புலனாய்வு அமைப்பும் ஈடுபடுத்தப்பட்டு, அவற்றின் உச்சப் பயன்பாட்டைப் பெறும் வகையிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டிருந்தும் கூட இவ்வாறான ஆச்சரியமூட்டும் தாக்குதல்கள் தொடர்வதானது, பேரினவாதிகளின் கனவுகளைச் சிதைக்க ஆரம்பித்துள்ளது.

ஸ்ரான்லி வீதியில் யூலை 4 ஆம் திகதி நடந்த - முக்கியத்துவம் பெற்றுவிட்ட - மனிதக் குண்டுத் தாக்குதலானது, அரசியற் பரிமாணத்திலும் -

சரசாலையில் யூலை 14ஆம் திகதி நடந்த, தொடர் காவலரண்கள் மீதான 45 நிமிடநேர - குடாநாட்டைப் பொறுத்தவரையில் - பெருந் தாக்குதலும், ஏனைய சிறுசிறு தாக்குதல்களும் இராணுவப் பரிமாணத்திலும் -

இனிவரும் காலத்தில், யாழ்ப்பாணத்தில் அரசாங்கம் சந்திக்கப்போகும் பாரிய நெருக்கடிகளையே சுட்டிக்காட்டுகின்றன. அத்தோடு -

'யாழ் மக்கள் புலிகளை வெறுத்து ஒதுக்கி நிராகரித்துவிட்டார்கள் எனவும், தமது சூழ்ச்சிகர அரசியல் வலைக்குள் வீழ்ந்துவிட்டார்கள்' எனவும் தான் கொண்டிருக்கும் கணிப்பீடு முற்றிலுமே தவறானது என்பதை, சிங்கள அரசாங்கம், பெருந்துயரங்களோடு விரைவில் உணர்ந்து கொள்ளத்தான்போகிறது.! ○



## செவிகளைக் கூர்மையாக்குங்கள் !

மீண்டுமோர் நெடுவழிப் பயணம்.
இலக்கு எட்டப்படாமலே
திசைமாற்றிப் புறப்பட்டாயிற்று.
சைக்கிள் ' கரியர் 'களுக்குள்
முன்னம் சுருக்கிக் காத்த சொத்துக்கள்
தயாராகின இருப்பிடம்போக.
இம்முறை வெடிகளதிரவில்லை
உடைமாற்றிக் கொள்ளவும் நேரமிருந்தது.
' சாறம் ' மாற்றி
' ரௌசர் ' போட்டுக்கொண்டார் அப்பா.
' ...கதிர் ' இம்முறை ' சுட 'வில்லையாம்
சூரியன் மேற்கிலுதித்துவிட்டதாய்
எல்லார் முகங்களிலும் வியப்பு.
குந்தியிருந்த இடத்து மண்ணையும்
தட்டிக் கொட்டி புறப்பட்டாயிற்று -
உதிர்ந்த மண்ணுடன்
சுதந்திரமும்...? போகிற அவசரம்.

2

பாட்டியும்
பாட்டியின் பாட்டியும்
அவள் பூட்டியுமென வாழ்ந்த ஊர்.
பொக்கை வாயசைத்து
அவள் சப்பிய கதைகளுக்காய்
வாய்பிளந்திருந்த முற்றம்.
'கொஞ்சங் கொஞ்சமா பொருள்சேர்த்து
ஒவ்வொரு கல்லா
என்ர கைபட எடுத்துவைச்சுக் கட்டின வீடு'
திரும்பவும்... திரும்பவும்
கைக்கெட்டிய தொலைவில்.
'' விடிவுகாலம் வந்திட்டுதோ... ? ''
வந்த வேகத்திலும் பன்மடங்கதிகமாய்
முண்டியடித்து நகர்கிறது பயணம்.

3

ஊர் களைகொண்டுவிட்டது.
'' புனர்வாழ்வு '' அளிக்கப்போவதாய் ..
சிரங்கிகள்
தாம உழுதுதீர்த்த வீடுகளை
பார்வையிட வந்திருக்கின்றன.
கடுகுழல்களுக்குள்
' வெண்தாமரைகள் '
நிரப்பப்பட்டுள்ளனவாம்!
' அவர்களது ' கால்களில்
பூட்சுகளில்லை
தோள்களிலோ நிவாரண மூடைகள் -
இரத்தக்கறை மறைத்து
மா அள்ளிக்கொடுக்கின்றன கைகள்.

'' இஞ்சை ஒரு பிரச்சினையுமில்லை ! ''

நவீன சிபியின் தராசில்
சுதந்திரத்துக்கீடாக வைக்கப்படுகிறது
அரை இறாத்தல் பாண்.

எங்கோ தொலைவில்
இன்னமும்
எதிரொலித்துக்கொண்டிருக்கிறது ஓர் குரல்.
தேவாலய இடிபாடுகளிடையே -
உடல் சிதைந்த தாயினணைப்பில்
உயிர்பிழைத்த குழந்தையின் கதறலோ... ?
ஓ...
செவிகளைக் கூர்மையாக்குங்கள் !

- ருத்ரா ○


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# இலங்கை இனப்பிரச்சினை மீதான அமெரிக்காவின் பக்கச்சார்பு நிலைப்பாடு

அண்மைக்காலமாக, இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக, அமெரிக்கா அதிக அக்கறை செலுத்திவருகின்றது; அரசியல் – இராணுவ ரீதியில், ஒருதலைப் பட்சமாக, சிறிலங்கா அரசுக்கு உதவும் செயல்களில் அது, தீவிரம் காட்டுகின்றது.

- 'கிறீன் ஃபெரே' என்கின்ற – அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் பிரிவு ஒன்று கொழும்பு வந்து, சிங்களப் படையினருக்கு போர்ப்பயிற்சி அளித்துவருகின்றது.
- அத்துடன், தமிழரின் போராட்ட நடவடிக்கைகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்தும் வகையில் அது, அறிக்கைகளையும், கண்டனங்களையும் வெளிப்படுத்திவருகின்றது.
- அதேவேளை, 'சிறிலங்காவுக்கு அழிவாயுதங்களை விற்பதில்லை' என்ற அதன் முன்னைய முடிவை இப்போது விலக்கிக்கொண்டதால், அமெரிக்க ஆயுதங்கள் சிங்கள அரசுக்கு விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.
- அதுமட்டுமல்ல, தனக்கு அனுசரணையாக உள்ள நாடுகள் மூலமாக, சிங்களப் படைகளுக்கு, சலுகை அடிப்படையில் அழிவாயுதங்களை விற்கும் விவகாரங்களில், அமெரிக்கா பின்னணியில் நின்று செயற்பட்டு வருகின்றது.

மனித உரிமை விவகாரம் – உலகளாவிய ரீதியில் சமாதானம் என்ற கொள்கைகளை முன்வைத்துச் செயற்படும் அமெரிக்க அரசு, சிறிலங்கா – புலிகள் போர் நடவடிக்கைகள் தொடர்பாக பக்கச்சார்பு நிலை எடுத்து, தமிழரின் போராட்ட நடவடிக்கைகளை மட்டும் கண்டிக்க முயல்வது, எமக்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது.

அமெரிக்காவின் இச்செய்கை காரணமாக, சிங்கள அரசின் போர்க் குற்றங்களும் – தமிழரின் போராட்ட நியாயங்களும், உலக சமூகத்தின் முன் மறைக்கப்படும் அபாயம் ஒன்று தோன்ற இடமுண்டு.

40 வருடகாலமாக – பல்வேறு வழிகளிலும் – தமிழினத்தை ஒடுக்கிவரும் ஒரு அடக்குமுறை அரசுக்கு, அரசியல் – இராணுவ ரீதியில் உதவிகள் பல புரிந்து,

புலிகளின் குரல்

Liberation Tigers Of TAMIL EELAM

ஒத்தாசையாக இருக்க முயலும் அமெரிக்காவின் நடவடிக்கை, ஈழத் தமிழர்களுக்கு விசனத்தைக் கொடுத்துள்ளது.

அமெரிக்கா கடைப்பிடிக்கும் இந்தத் தவறான நிலைப்பாட்டிற்குப் பிரதான காரணம், தமிழ் – சிங்கள இன முரண்பாட்டின் வரலாற்றையும் அதன் ஆழ அகலங்களையும் அது, சரிவர அறிந்து வைத்திருக்காததே ஆகும்.

தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்று அடிப்படைகளைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, அடக்கும் சிங்கள அரசுக்கும் 'அடக்கப்படும் தமிழினத்திற்கும் இடையே ஒரு அரசியல் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளைச் செய்வதற்குப் பதிலாக, அடக்குமுறை அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் அமெரிக்காவின் அணுகுமுறை, தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

குடாநாட்டை சிங்களப் படையினர் ஆக்கிரமித்துவிட்ட இந்த நிலையிலும் கூட, 'பேச்சுவார்த்தைமூலமே அரசியல் தீர்வு காணப்படவேண்டும்' என பல்வேறு தரப்பினரும் அரசை வலியுறுத்தும் இந்த நேரத்தில், சிங்களப் பேரினவாதத்தின் இராணுவமுனைப்புக்கு ஆதரவும் – உதவியும் நல்கும் விதமாக அமெரிக்க அரசு செயற்படுவது நல்லதல்ல.

இதேவேளை, உதவிகள் என்ற போர்வையில் சிங்கள அரசின் போர்த் தேவையை ஈடுசெய்யத் தேவையான நிதியை – உலக நிறுவனங்கள் வழங்கும் விவகாரத்தின் பின்னணியிலும், அமெரிக்கச் செல்வாக்கு காணப்படுகின்றது. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சிங்கள அரசு கடைப்பிடிக்கவிரும்பும் இராணுவக் கொள்கைக்கு, இந்த வெளிநாட்டுப் பணம்தான் முதுகெலும்பாக இருக்கின்றது. இந்தச் சூழலிலேயே, சிங்களப் படைகளுக்கு அமெரிக்கா வழங்கும் போர்ப்பயிற்சிகளும் ஆயுதங்களும் மற்றும் பிரச்சார உதவிகளும், சிங்கள அரசுக்கு மேலும் மேலும் போர்வெறியை ஊட்டிவருகின்றன.

ஒட்டுமொத்தமாகச் சொன்னால், இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக சிங்கள அரசு கடைப்பிடிக்கும் இராணுவ அணுகுமுறைக்கு, அமெரிக்காவின் மேற்குறித்த செயற்பாடுகள், ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்துபவையாகவே காணப்படுகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினையில், அமெரிக்கா ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. இந்த வகையில் இனப்பிரச்சினை விவகாரத்தில், சிறிலங்கா அரசுக்கு ஒருதலைப் பட்சமாக வழங்கும் ஆதரவுநிலைப்பாட்டை அமெரிக்கா கைவிட்டு, இருபகுதியினருக்கும் இடையே நடுவு நிலைமையைக் கடைப்பிடித்து, இனப்பிரச்சினையை அணுகவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். அத்துடன், சிறிலங்கா அரசின் இராணுவவாத கொள்கைக்குச் சார்பாக, தற்போது அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கை, அதன் மனித உரிமை விவகாரம் மற்றும் சமாதானம் என்ற வெளிநாட்டுக் கொள்கைக்கு முரணானதாக உள்ளது என்ற உண்மையையும், அமெரிக்க அதிகாரிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்,

ஆகவே, நடுநிலைமையுடனும் – இராஜதந்திர ரீதியிலும், தமிழ் – சிங்கள இனப்பிரச்சினையை அணுகி, இலங்கைத் தீவில் சமாதானச் சூழல் ஒன்றை உருவாக்க, அமெரிக்கா துணையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது மக்களின் விருப்பமாகும்.

அதைவிட்டுவிட்டு, சிறிலங்கா அரசின் போர்முனைப்பிற்கு அமெரிக்கா ஆதரவும் உதவியும் வழங்குவதென்பது, தமிழ் – சிங்கள இன முரண்பாட்டை மேலும் சிக்கலாக்குவதுடன், போரும் விரிவுபெற்று – அதனால் மனித அவலங்கள் பெருகவுமே வழிசமைத்துக் கொடுக்கும்.

ஆகவே, இத்தீவின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அமெரிக்கா, ஒரு நடுநிலைமைக் கொள்கையையும் – நிதானப் போக்கையும் கடைப்பிடித்து, இராஜதந்திர வழிமுறைகள்மூலமாக சமாதானத் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே, ஈழத் தமிழர்களின் விருப்பமாகும்! O

# நுணுக்குக்காட்டி

''எல்லாப் போர்களையும் போலவே சுதந்திரப் - போரும் ஒருநாள் முடிவுக்குவரும்; சுதந்திரத் தனிநாட்டை அடைவதன்மூலமோ, அதற்காகப் போராடும் தேசிய இனத்தினால் சுதந்திரப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

சிறீலங்காவில் தற்போது, நீண்டகாலக் கெரில்லாப்போர் - இரண்டு தேசிய இனங்களினது வளங்களின் அழிவு - சிங்கள மக்களின் சிவில் அரசாங்கத்தின் சீர்குலைவு - இறுதியாக தமிழீழம் அமைதல் என்பவற்றுக்குரிய சூழல் உள்ளது. சிங்கள அரசின் முயற்சிகள் இந்நிகழ்வுத் தொடரைச் சிறிது காலந்தாழ்த்தமுடியுமே தவிர, அதன் இறுதி விளைவைத் தடுக்க முடியாது.''

- அதிரியன் விஜேமான்ன
'ஹொட் ஸ்பிறிங்' - மே 1996 இதழில்.

(யாழ்ப்பாணம்) ''ஆரியச் சக்கரவர்த்திகளின் அதிகாரம் தென்னிலங்கை வரையும் அக்காலத்தில (கி. பி. 1344) பரந்திருந்தது என்பதற்கும் பல வரலாற்று ஆவணங்கள் சான்று பகர்கின்றன. இத்தொடர்பில், 'நிகாய சங்கிரஹய' வில் உள்ள குறிப்பும் கவனத்தில் கொள்ளத்தக்கது. அக்குறிப்பு வருமாறு:

'ஆரியச் சக்கரவர்த்தி கொழும்பு, வத்தளை, சலாவதளை (சிலாபம்), மீகமுவ (நீர்கொழும்பு) மற்றும் கரையோரப் பட்டினங்களில் இராணுவ முகாம்களை அமைத்திருந்தான்' (நிகாய சங்கிரஹய பக். 23).''

- க. தங்கேஸ்வரி
'தினகரன்' - 23. 06. 1996.

''...யுத்தம் உடனே நிறுத்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும். பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகள்தான் முறித்தார்கள் என்று சந்திரிகா சொல்கிறார். பேச்சுவார்த்தையின்போது சந்திரிகா அரசாங்கம் நடந்துகொண்ட முறைதான் பேச்சுவார்த்தை முறிந்ததற்கான காரணம். வெறுமனே பயங்கரவாதம் என்று இனப் போராட்டத்தைச் சொல்வது அறிவீனம். இது இனப்பிரச்சினையைத் தீர்க்க உதவாது. மனித உயிர்கள் பலியாகவே வழிவகுக்கும்.''

டொக்ரர் கனில் ரத்னப்பிரிய
(நவசமசமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்)
'வீரகேசரி' - 02. 07. 1996.

''வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவை நாடு எதிர்நோக்கியுள்ளது. சகல துறைகளுமே ஸ்தம்பிதமடைந்துள்ளன. இவ்வருட இறுதியில் நாட்டின் நிலைமை மேலும் மோசமடையும்.''

- ரணில் விக்கிரமசிங்க
'வீரகேசரி' - 21. 06. 1996


''கூட்டுப்படைத் தலைமையினால் (ஜே. ஓ. சி.) எமது அதிகாரம் பறிக்கப்பட்டிருந்தது. ஜே. ஓ. சியை 'ஜோக் ஓவ் த செஞ்சரி' (இந்த நூற்றாண்டின் நகைச்சுவை) என்று அப்போது கேலிசெய்தவர்களும் உண்டு.''

- சிசில் வைத்தியரத்ன
(முன்னாள் இராணுவ தளபதி)
'வீரகேசரி' - 15. 06. 1996

# அழிவுறும் உல்லாசப் பயணத்துறை: நலிவுறும் பொருளாதாரம்!

சி. வரதராஜன்

உல்லாசப் பயணிகளின், தென்னாசியாவின் சொர்க்கபுரியாகக் கருதப்பட்டுவந்த இலங்கை இன்று, நரகமாக மாறிவருகிறது. 1982ஆம் ஆண்டு இலங்கைக்கு ஆகக்கூடுதலான 4,07,000 உல்லாசப் பயணிகள் வருகை தந்திருந்தனர். 1983ஆம் ஆண்டின் 'இனப்படுகொலை' உல்லாசப் பயணத்துறைக்குப் பலத்த அடியைக் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சியினை அனுபவிக்கத் தொடங்கிற்று. 1989 ஆம் ஆண்டு 1,85,000 பேர் மட்டுமே இலங்கைக்கு வருகைதந்திருந்தனர், எனினும் 1990 - 94 காலப்பகுதியில், உல்லாசப் பயணத்துறை தனது வீழ்ச்சியில் இருந்து படிப்படியாக மீட்சி பெறத் தொடங்கியது.




நன்றி : 'சண்டே ரைம்ஸ்' (16 ஜூன் 1996)

1990இல் 514 கோடி ரூபாவாக இருந்த உல்லாசப் பயணத்துறையிலிருந்தான வருமானம், 1994இல், 1138 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தது. இத்தீவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம், தீவின் வடக்குக் கிழக்குப் பகுதியோடு கட்டுப்படுத்தப்பட்டது என்ற வெளிநாட்டவர்களின் உணர்வே, இவ்வளர்ச்சிக்குக் காரணமாகும், எனினும், 1995ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும் 1996 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் நிலைமை முற்றிலும் மாறியது.

1995 ஒக்ரோபரில் நடைபெற்ற கொலன்னாவைத் தாக்குதல், நொவெம்பரில் நடைபெற்ற கொம்பனித்தெரு இராணுவத் தலைமையகத் தாக்குதல், 1996 ஜனவரியில் நடைபெற்ற மத்திய வங்கித் தாக்குதல், ஏப்ரில் மாதம் நடைபெற்ற கொழும்புத் துறைமுகத் தாக்குதல் போன்றவை, யுத்தம் கொழும்பிற்குப் பரவிவிட்டது என்பதனை உலகிற்கு எடுத்துக் கூறின. இதனைத் தொடர்ந்து, உல்லாசப் பயணிகளின் வருகை கணிசமானளவில் வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. கடந்த ஆண்டு ஜனவரி - ஏப்ரில் மாத காலப்பகுதியில், 1,62,408 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்திருந்தனர். ஆனால், இவ்வாண்டு இதே காலப்பகுதியில், 1,07,335 பேர் மட்டுமே வந்தனர். எனவே, இக்காலப்பகுதியில் 34 சதவீதத்தினால் உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் 135 உல்லாசப் பயண விடுதிகள் பற்றிய ஆய்வில், 1995 மார்ச் மாதம் 65 வீதமான அறைகளில் உல்லாசப் பயணிகள் தங்கியிருந்தனர் என்பதும், 1996 மார்ச் மாதம் இது 40 வீதமாக மட்டுமே இருந்தது என்பதும், வெளிப்பட்டது. எனவே, 60 வீதமான அறைகள் வெறுமையாக உள்ளன என்பதனை இது காட்டுகிறது.

உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிப்பதற்கு பத்தாண்டுத் திட்டமொன்றை (1991 - 2001) நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கும் காலகட்டத்தில், இத்தகைய வீழ்ச்சி எதிர்பாராததொன்றே. அரசாங்கம் உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிப்பதற்கு வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கின்ற அதே நேரத்தில், அதற்கு எதிர்மாறான விளைவுகள் உள்நாட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி, இலங்கையின் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் திரு தர்மசிறி சேனநாயக்கா, லண்டனில் உல்லாசப் பயணச் சபை அலுவலகம் ஒன்றைத் திறந்துவைத்து, இலங்கைக்கு வருமாறு வேண்டுகோள் விடுகின்றார். அதேநாளில், கொழும்பில் மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு நிகழ்கிறது. இதனையடுத்து, லண்டனில் உள்ள உல்லாசப் பயண ஏற்பாட்டாளர்கள் இலங்கையின் உல்லாசப் பயண விடுதிகளோடு உடனடியாகத் தொடர்புகொண்டு, இவ்வாண்டுக்கான தமது அறை ஒதுக்கீடுகள் முழுவதனையும் ரத்துச் செய்தனர். மேலும், தங்களது ஐரோப்பிய பிரயாண ஏற்பாட்டாளர்களுக்கு, 15 இலவச விமான ரிக்கற்றுக்களும் 15 தினங்களுக்கு இலங்கையில் இலவச தங்குமிட வசதிகளும் தருவதாகக் கூறி, உல்லாசப் பயணச் சபை அவர்களை இங்கு வருமாறு அழைப்பு விடுத்தது. ஆனால், ஒரு பிரயாண முகவர்கூட இதனை ஏற்கவில்லை. 'தோமஸ் குக்' பிரயாண ஏற்பாட்டாளர் பீற்றர் டி சில்வா, '' இது எங்களுக்கு மிகவும் தாழ்ந்த பருவகாலம். கடந்த ஆண்டோடு, ஒப்பிடுமிடத்து, உல்லாசப் பயணிகளின் வருகை 75 வீதத்தால் குறைந்துள்ளது'' என்று கூறுகின்றார்.

**தென்னாசியாவின் சொர்க்கபுரியாகக் கருதப்பட்டுவந்த இலங்கை இன்று, நரகமாக மாறிவருகிறது!**

உல்லாசப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் சில விடுதிகள் மூடப்பட்டுள்ளன. பல விடுதிகள் எதிர்காலத்தில் மூடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பல விடுதிகளில், தங்கியிருப்போர் வீதம் மிகவும் குறைவு. வங்கிக் கடன்களைக் குறித்த தவணையில் கட்டமுடியாத நிலையில் பல விடுதிகள் உள்ளன. பல விடுதிகள் தமது ஊழியர்களை ஓய்வு பெறுமாறு வற்புறுத்துகின்றன. இதன்மூலம் தமது பராமரிப்புச் செலவினைக் குறைக்கலாம் என அவை நம்புகின்றன. மூன்று நாள் மின்வெட்டு நிலைமையை மேலும் மோசமாக்கியது. இக்காலப்பகுதியில் இலங்கைக்குச் செல்லவேண்டாம் என, பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகம், பிரித்தானியப் பிரயாணிகளுக்கு ஆலோசனை வழங்கியது. மத்திய வங்கிக் குண்டுவெடிப்பின்போது, ஆஸ்திரேலிய வெளிநாட்டு அலுவலகம் இதேமாதிரியான ஆலோசனையைத் தனது நாட்டு மக்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இஸ்ரேல், எகிப்து, துருக்கி போன்ற நாடுகளில் யுத்த சூழ்நிலை இருந்தபோதிலும், இந்நாடுகளில் உல்லாசப் பயணத்துறை வளர்ச்சி பெற்றுள்ளது. ஏனெனில், இந்நாடுகளிலெல்லாம் ஒருபகுதியில் யுத்த சூழ்நிலை; மறுபகுதியில் பாதுகாப்பு. சிறந்த உதாரணம், இஸ்ரேலின் மேற்குக் கரையில் மட்டும் யுத்தம். ஆனால் இலங்கையில், வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி தீவு முழுவதும் யுத்தம் பரவியுள்ளது.

இந்நிலையில் உல்லாசப் பயணத்துறையை மீட்டெடுப்பதற்கு, 27.5 கோடி ரூபா நிதி உதவியை, உல்லாசப் பயணச் சபை அரசாங்கத்திடம் கோரியுள்ளது. உல்லாசப் பயணச் சபை இயக்குநர் ரஞ்சித் பெரேரா பின்வருமாறு கூறுகின்றார்: ''அரசாங்கத்தின் அதிகரித்த பாதுகாப்புச் செலவு காரணமாக, உல்லாசப் பயணத்தை ஊக்குவிப்பதற்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது.'' எதிர்வரும் ஒகஸ்ற் மாதம் - கண்டிப் பெரஹரா காலத்தில் - உலகின் தலைசிறந்த 75 உல்லாசப் பயண எழுத்தாளர்களை வரவழைத்து, நன்கு உபசரித்து, சாவதேச ரீதியில் பரச்சாரத்தை மேற்கொள்ள உல்லாசப் பயணச் சபை முயற்சி செய்து வருகின்றது. எனினும், அடுத்துவரும் மாதங்களில் யுத்தத்தின் சத்தங்கள் கொழும்பில் கேட்குமேயானால், உல்லாசப் பயணத்துறை, மீட்டெடுக்க முடியாதவாறு அதல பாதாளத்தில் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்!

## உல்லாசப் பயணத்துறையின் முக்கியத்துவம்

- வருடாந்தம் சராசரியாக 1150 கோடி ரூபா வருமானம்.
- ஏறத்தாழ 75,000 பேருக்கு வேலை வாய்ப்பு.
- உல்லாசப் பயண விடுதிகளின் மீதான விற்பனை வரி வருமானம்.
- ஊழியர்களின் வருமான வரி வருமானம்.
- எயார் லங்கா விமானச் சேவைமூலம் வருமானம்.
- விமான நிலையக் கட்டணம்.
- விமானங்களுக்கான எரிபொருள் விற்பனை வருமானம்.
- மிருகக்காட்சிச்சாலை, தொல்பொருட் காட்சியகம்மூலம் வருமானம்.
- கைவினைப் பொருட்களுக்கான விற்பனை வாய்ப்பு.

# அரசின் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைப்பது விடுதலைப் போராட்டத்திற்கு அவசியமானதா?

- சிவில் நிர்வாகம் என்பது மக்களுக்கானதுதானே!
- அதனால் மக்கள்தானே பயன் பெறுகின்றனர்!
- அதைச் சீர்குலைப்பதால் அரசுக்கு என்ன நட்டம்?
- விடுதலைப் போராட்டத்திற்கு என்ன இலாபம்?

மக்கள் மத்தியில் எழுகின்ற இவ்வாறான வினாக்களுக்கு விடை தருகின்றது இக்கட்டுரை.




சிங்கள அரசின் ஆட்சியை - தமிழர் தாயகத்தில் இருந்து - தூக்கி வீசுவது என்பது, புலிகள் இயக்கத்தின் அரசியல் கொள்கையாகும்.

சிவில் நிர்வாகம் என்ற பெயரில் நடைபெறும் சிங்கள ஆட்சியானது, தமிழரின் தேசிய அபிலாசைகளைக் கட்டுப்படுத்தி அல்லது நசுக்கி, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியைக் கருவறுக்க முயற்சிகள் பல செய்கின்றது.

தமிழினத்திற்கெதிரான அடக்குமுறைச் சட்டங்களையும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஆட்சி அலகுகளையும் - அவற்றிற்கு நியாயம் கற்பித்து, அவற்றை வலுப்படுத்தும் நிறுவனங்களையும் ஒருங்கே கொண்ட, ஒரு சங்கிலித்தொடர் அமைப்புத்தான், சிங்களச் சிவில் நிர்வாகமாகும்.

சிவில் நிர்வாகம் என்ற இந்த விடயத்திற்குள், எமது மக்களின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, கல்வி, மருத்துவம் போன்ற சில பணிகளும் அடங்கியிருப்பதால், சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைத்தல் என்ற புலிகள் இயக்கத்தின் கொள்கையை, சிலர் குழப்பத்துடன் நோக்குகின்றனர்.

மேற்குறித்த அத்தியாவசியப் பணிகளை நிறைவேற்றல் என்பது சிங்களச் சிவில் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக இருந்தபொழுதிலும், இந்தப் பணிகளுக்குப் புலிகள் தடை விதிப்பதில்லை; இன்னும் சொல்லப்போனால், அந்தப் பணிகளுக்கு புலிகளும் உதவுகின்றனர்.

எனினும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் சாக்கில், படையினர் தமது தேவைகளை நிறைவேற்ற முயலும் புத்திசாதுரியத்தைப் புலிகள் அனுமதிப்பதில்லை.

சில விடயங்களில், மக்களின் தேவைகளும் - படையினரின் இராணுவத் தேவைகளும் ஒரு இடத்தில் சந்தித்துவிடுகின்றன. மக்கள்சேவை என்ற போர்வையில், தமது படைத்தேவைகளையும் பூர்த்திசெய்துவிட, இராணுவத்தினர் முனைகின்றனர்; இதை அனுமதிக்கமுடியாது. இதனால் மக்களும் சில சிரமங்களை - கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். ஆயினும், அது தவிர்க்கமுடியாத ஒரு செயற்பாடாக விளங்குகின்றது. எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில், மக்கள் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்குள் வாழும் மக்களுக்கான விநியோகங்களை மேற்கொள்ளும் கப்பற்போக்குவரத்தை புலிகள் தடுக்கவில்லை; ஆனால், படையினருக்கான கப்பல் போக்குவரத்தை, நிச்சயம் புலிகள் தாக்குவர். அதனால், மக்களுக்கான விநியோகங்களுடன் சேர்த்து, படையினரின் பொருட்களையும் கொண்டு செல்வதிலேயே, அரசு குறியாக இருக்கின்றது. இதை அனுமதிக்க முடியாது. இத்தகையதொரு சூழ்நிலையை தமக்குச் சாதகமாக்க முயலும் சிங்கள அரசு, ‘மக்களின் விநியோகத்திற்கு புலிகள் தடைவிதிக்கின்றனர்’ என்ற அபத்தமான குற்றச்சாட்டை புலிகள் இயக்கம்மீது சுமத்துகின்றது; இதை எமது மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

சிங்களப் படைகளை எமது தாயக மண்ணிலிருந்து விரட்டியடிக்கவேண்டும் என்பதே, எமது போராட்டத்தின் பிரதான இலக்கு. இதில் நாம் வெற்றிபெற வேண்டுமாயின், சிங்களப் படைக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுக்கவேண்டும். இராணுவரீதியான நெருக்கடிகளுடன் பொருளாதார சிரமங்களுக்குள்ளும் அரசைத் தள்ளிவிடவேண்டும். அத்துடன், எமது மண்ணில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகளின் சின்னச் சின்னத் தேவைகளையும் தடைசெய்வதன்மூலம், அதன் இருப்பிற்கு நாம் தொல்லைகளை ஏற்படுத்தவேண்டும். ‘சிறுதுளி பெருவெள்ளம்போல்’ சிறிய சிறிய சிரமங்கள் மற்றும் இல்லாமைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து, படையினருக்கு ஒரு பாரிய நெருக்கடியைக் கொடுக்கும்; அது எமது விடுதலைக்கு வலுச்சேர்க்கும்.

எமது மண்ணிலுள்ள சிங்கள அரசின் சொத்துக்களை அழித்து அதற்கு பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்தும் விடயத்திலும், மக்கள், சில சிரமங்களைச் சந்திக்கக்கூடும். எமது இனத்தின்மீது அரசு ஏவி விட்டுள்ள போர் அரக்கனின் முதுகெலும்பாக, அரசுப் பொருளாதாரமே உள்ளது. இதை நாசஞ் செய்வதன்மூலம், போர் அரக்கனை நகரவிடாது - அவனை - படுக்கையில் வீழ்த்தமுடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட சில அரசுச் சொத்துக்களை அழித்தல் என்ற இராணுவச் செயற்பாடு, அரசு நிர்வாகத்தை எமது மண்ணில் சீரழித்தல் என்ற அரசியல் இலக்கிற்கும் துணைசெய்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் அரசுச் சொத்துக்களான மின் மாற்றிகளையும் - தொலை தொடர்பு நிலையங்களையும் புலிகள் தாக்கி அழித்து வருவதால், மக்கள் சில வசதிக் குறைபாடுகளை எதிர்கொள்கின்றனர் என்பது உண்மைதான்; ஆனால், அந்த நாசவேலைகள்மூலம் அரசுப் படைகளின் இராணுவ செயற்பாடுகளும் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை உணர்ந்துகொண்டு, மேற்குறித்த வசதிக் குறைபாடுகளை, மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையை, மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மலையளவு உயர்ந்துவிட்ட போர்ச்செலவை ஈடுசெய்வதற்கு வெளிநாட்டு உதவிகளையே அரசு, நம்பியிருக்கின்றது. போர்ச்செலவிற்கென்று வெளிநாடுகள் பணம் கொடுக்க முன்வரமாட்டாது. அத்துடன், எப்படியாவது போரை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதியை நிலைநாட்டினால், புனரமைப்பு - அபிவிருத்திக்கென்று நிறையப் பணம் தருவோம் என, வெளிநாட்டு அரசுகள் நிபந்தனை விதிக்கின்றன.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடாநாட்டில் அமைதி திரும்பி விட்டது என்று உலகிற்குக் காட்டுவதற்காக, அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு துடிக்கின்றது. குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது என்று காட்டுவதற்காக அமைச்சர் வருகைகளும் - திறப்புவிழாக்களும்! மற்றும், குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பிவிட்டது என்று கூறுவதற்காக, திட்டமிட்ட வகையில், விதவிதமான புகைப்படங்களை பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்வித்தும், பொய்ப்பிரச்சாரங்களில் அரசு ஈடுபடுகின்றது. இந்த நாடகத்தில் அரசு அக்கறைகாட்டுவதற்குப் பிரதான காரணம், வெளிநாடுகளில் இருந்து நிதிபெறுவதுதான். அந்த நிதிபெறுதலில் அரசு வெற்றிபெறுமாயின், அந்தப் பணத்தைப் பயன்படுத்தி அடுத்த படையெடுப்பைச் செய்து, மேலுமொரு தொகுதி நிலத்தை ஆக்கிரமிக்க அது முயலும்.

இந்த ஆபத்தை வருமுன் தடுக்கும் வழிகளில் ஒன்றாக, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அரசின் சிவில் நிர்வாகத்தை இல்லாது செய்துவிடுதல் என்பது, அத்தியாவசியத்தேவையாகின்றது.

கைப்பற்றப்பட்ட நிலங்களில் சிவில் நிர்வாகத்தை அரசால் நடைமுறைப்படுத்த முடியாது போகும்போது, அந்த நிலத்தையும் - மக்களையும் கையகப்படுத்தியதால் தனக்கு எந்த ஒரு நன்மையும் கிடைக்கவில்லையே என்ற விரக்தி உணர்வை, அரசு அனுபவிக்கும்; இது, இனப்பிரச்சினை மீதான இராணுவ அணுகுமுறையை கேள்விக்குரியதாக மாற்றும்.

இதற்குப் பதிலாக, அரசின் சிவில் நிர்வாகம், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஒழுங்காக நடைபெறுமானால், உலகநாடுகள், சிங்கள அரசாங்கத்திற்கு பெருந்தொகைப் பணத்தை ‘‘புனர்நிர்மாணத்திற்காக’’ என அள்ளி வழங்கும். அந்தப் பணம் திசைதிருப்பப்பட்டு, தமிழினத்திற்கு எதிரான போரிலேயே செலவிடப்படும். அத்துடன், தனது ஆட்சியைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று உலகிற்குக் காட்டுவதுடன், தமிழினம் மீதான அரசின் ஒடுக்குமுறையையும் சிங்கள அரசு மறைத்து விடும். அதேவேளை, தனது சட்டங்களை - அதைப் பாதுகாக்க முயலும் சிங்களக் காவல்துறையை - இராணுவத்தை - கடற்படையை - வான்படையை - தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று உலகிற்குக் கூறுவதுடன், ஒரு ‘ஏமாளிகள் கூட்டமாக’ தமிழினத்தை உலகின்முன் நிறுத்திவிடும். அதுமட்டுமல்ல, அரசினது சிவில் நிர்வாக அமைப்புக்களில் பணிபுரியும் தமிழ் ஊழியர்களை - அதிகாரிகளை - தமது புலனாய்வு முகவர்களாக இருந்து செயற்படுமபடி, படையினர் நிர்ப்பந்திப்பர்; இறுதியில், தமிழினத்திற்கு ஒட்டுமொத்த அழிவையே இவை, ஏற்படுத்தும்.


ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் அரசின் சிவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுமானால், எமது போராட்டத்திற்கும் எமது இனத்திற்கும் ஏற்படும் ஆபத்தை - அழிவை - மக்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே, அரசப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைத்துவிடல் என்பது, எமது போராட்டத்திற்கு நன்மை பல பயக்கும் என்ற உண்மையை, எமது மக்கள் அறிந்துகொள்ளவேண்டும்! ○

# விடிவு தோன்றாத - முடிவு தெரியாத - நிலையில் ருஷ்யா!

வே. பாலகுமாரன்

எப்படியோ ஒருவாறாக போரிஸ் யெல்ட்சின் அடுத்த நான்கு வருடங்கட்கு ருஷ்ய சனாதிபதியாகிவிட்டார். 'இப்போதுதான் எனக்கு நிம்மதி' என கிளின்டன் பெருமூச்சு விடுகின்றார்; என்றாலும் அவருக்கு முழு நிம்மதி கிடைக்க வழியில்லை. ஏனென்றால், மிதமிஞ்சிய குடியால் ஈரலும் கெட்டுப்போய், கடுமையான மாரடைப்பு இரு தடவை ஏற்பட்டதால் இருதயமும் தளர்ந்திருக்கும் யெல்ட்சின், எவ்வளவு காலம் இன்னமும் காலந்தள்ளுவார் என்பது கேள்விக் குறியாக உள்ளது. இருந்தபோதும், வியப்புக்களும் திகைப்புக்களும் நிரம்பிய இரண்டு



போரிஸ் யெல்ட்சின்: இன்னும் எவ்வளவு காலம்?

சுற்றுத் தேர்தல்களின் பின், 53.7 விழுக்காடு வாக்குகளை யெல்ட்சின் பெற, வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட ருஷ்ய கொம்யூனிஸ்ற் கட்சியின் பொதுச் செயலர் கெனடி சுகனோவ், 40.4 விழுக்காடு வாக்குகளையே பெற்றார். என்றாலும், தீண்டத்தகாத கட்சியாக வருணிக்கப்பட்ட அக்கட்சியின் வருகையை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், தம்மை சனநாயக வழிக்கு இட்டுச் சென்றதாகப் பெருமை பேசிய கட்சிகளைக் கைகழுவிவிட்ட மக்கள், தமது முன்னைய வரட்டுச் சித்தாந்தப் போக்குகளைக் கைவிட்டு - காலமாற்றத்திற்கேற்ப கருத்தை மட்டுமல்ல பெயரையும் மாற்றிக்கொண்ட பொதுவுடமைக் கட்சிகளை ஆளும் கட்சிகளாகத் தெரிவுசெய்யும் பின்னணியில், இம் முடிவையும் பார்க்கவேண்டும். கடந்த இரண்டரை வருடங்களுக்குள்ளே கங்கேரி, ருமேனியா, லிதுவேனியா, பல்கேரியா போன்ற நாடுகளில் சோசலிச, சமூக சனநாயகக் கட்சிகளாகப் பெயர் மாற்றிக்கொண்ட முன்னைய கொம்யூனிஸ்ற் கட்சிகள் ஆளும் கட்சிகளாக மாற்றம் பெற்றுவிட்டன. அதிலும் குறிப்பாக, போலந்தில் ஏற்பட்ட மாற்றமே குறிப்பிடத் தக்கது. போலந்து கொம்யூனிஸ்ற் கட்சிக்கு எதிராகப் போராடி சனநாயகத்தை மீட்டதாகக் கருதப்பட்ட 'சொலிடாரிட்டி' அமைப்பு இப்போது, முற்றாக போலந்தில் செல்வாக்கிழந்து செல்லாக்காசாகிவிட்டது. இவ்வருடத் தொடக்கத்தில் போலந்தில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில், மேற்குலகின் செல்லப்பிள்ளையான லெக் வலேசா முதல் சுற்றில் வெற்றி பெற்றபோதும், இரண்டாம் சுற்றில், சீர்திருத்தி அமைக்கப்பட்ட கொம்யூனிஸ்ற் கட்சியின் அலெக்சாண்டர் குவாசினிய்வெஸ்கியிடம் தோற்றுப்போனார். தான் முன்னர் தோற்கடித்த அதே கட்சியிடம் தானே தோற்றுப்போன வலேசா, மீண்டும் கடான்ஸ்க்நகர் கப்பல் கட்டும் தளத்தில் - தனது முன்னைய மின்தொழிலாளப் பணியை மேற்கொள்ளப் போய்விட்டமை வரலாற்றின் கவைப்பான பக்கம்தான்.

எனவேதான், போலந்து போலவே ருஷ்யாவிலும் நடக்கும் என பொதுவில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவ்வாறு நிகழாமைக்கு என்ன காரணம்? ''யெல்ட்சினின் வெற்றி எனது வெற்றி'' எனக் கூறிய கிளின்டன் செய்த வேலையொன்று இப்போது, அமெரிக்க ரைம் இதழில் வெளியாகிவிட்டது. வரும் டிசெம்பர் சனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்கு நம்பியிருக்கும் - அதி நவீன விளம்பர உத்திகளைப் பயன்படுத்தி தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளும் - விளம்பர நிறுவனமொன்றை இரகசியமாக மொஸ்கோ அனுப்பி, அடாவடியான அதிரடி விளம்பர மாலைகளை உருவாக்க கிளின்டனே உதவினார் என்பது, அச்செய்தி. அத்தோடு, ருஷ்ய அரசின் மக்கள் தொடர்புச் சாதனங்களும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களும், முழுமையாக யெல்ட்சின் பற்றி மட்டுமே பெருத்த எடுப்பில் முக்கியப்படுத்திய தோடு, கொம்யூனிஸ்ற் கட்சி பற்றிய இழிவான செய்திகளை - வதந்திகளை - திரைப்படங்களை - இடைவிடாமல் ஒளிபரப்பின. அதேவேளை அரசுச் செலவிலே, புகழ்மிக்க இசைக்குழுக்கள் யெல்ட்சின் புகழ் பாடின. இவையெல்லாவற்றிற்கும் மேலாக உலக வங்கி, சருவதேச நாணய நிறுவனம் போன்றவை, நலிந்துபோயிருக்கும் ருஷ்யப் பொருளாதாரத்தை மீட்க தாம் செய்யும் உதவிகளை யெல்ட்சின் வெற்றி பெறாவிட்டால் நிறுத்திவிடுவோமென்று வெருட்டின. அதிலும் குறிப்பாக சருவதேச நாணய நிறுவனம், ருஷ்ய பொருண்மியத்தை உறுதிப்படுத்தத் தான் வழங்கவிருந்த பாரிய 10 பில்லியன் டொலர் கடனை நிறுத்திவிடுவதாக மிரட்டி, சூதாட்டம் ஆடியது. இவையெல்லாவற்றின் விளைவாக, நகரப்புறங்கள் யாவும் யெல்ட்சின் பக்கம் மாறின. குறிப்பாக ருஷ்யாவின் மிகப் பாரிய இரு நகரங்களான மொஸ்கோவிலும், சென் பீட்டர்ஸ்போர்க்கிலும் முறையே 75, 70 விழுக்காட்டிற்கு மேல் யெல்ட்சினுக்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டன. எவ்வதான் இவ்வெற்றி யாரினது வெற்றி என்கின்ற கேள்வி எழும்புகின்றது.

இது பற்றி மேலும் அறிய நாம், முதலாம் சுற்று தேர்தல் முடிவிற்குப் போகவேண்டும்.



கெனடி சுகானோவ் : கைக்கு வந்தது ?

ருஷ்ய இராணுவத்தின் 14ஆவது படைப்பிரிவின் தளபதியாகவிருந்து செச்சென்யாவில் இராணுவத் தலையீட்டை எதிர்த்துப் பதவி விலகிய ஜெனரல் அலெக்சாண்டர் லெப்பெட்டின் அரசியல் பற்றியும் அறியவேண்டும். யூன் 16 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் முடிவுகள் இவ்வாறுதான் அமைந்தன: யெல்ட்சின் 35. 1 விழுக்காடு வாக்குகளை அதாவது ஏறத்தாழ 2½ கோடி வாக்குகளைப் பெற, சுகானோவ் 32 விழுக்காடு அதாவது ஏறத்தாழ 2 கோடியே 32 இலட்சம் வாக்குகள் பெற, எவரும் எதிர்பாராக்காத வகையில் லெப்பெட் 14. 7 விழுக்காடு வாக்குகளை அதாவது ஏறத்தாழ 1 கோடி 6 இலட்சம் வாக்குகளைப் பெற்றார். இங்கே ஒரு தகவலை ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றார்கள். அதாவது, சீரழிந்துபோன தமது வாழ்க்கையை – சரிந்துபோன பொருண்மியத்தை - விபச்சாரமும் போதைப்பொருள் வணிகமும் வன்முறையும் நிரம்பிய மாஃபியா குழுக்களின் கட்டுப்பாட்டில் வந்துவிட்ட தமது நிலையை - எண்ணி வேதனைக் கண்ணீர் வடித்த ருஷ்ய மக்கள், யெல்ட்சினுக்கு மாற்றாக ஒருவரையே தெரிவு செய்ய விரும்பினர். எனினும், ருஷ்ய தேசியவாதத்தைத் தட்டியெழுப்பி பொருவாழ்வினைச் சுத்திகரிக்கப்போவதாக உறுதியளித்த மூவரிடையே, அவர்களின் வாக்குகள் பங்கிடப்பட்டுவிட்டன என்பதே அது. குறிப்பாக, நடைமுறைக்குப் பொருந்தாத அதிதீவிரவாதப் போக்கினை வெளிப்படுத்திய விளாடிமிர் சிரினோவ்ஸ்கியை மக்கள் நிராகரித்தபோதும், அவருக்கும் 5. 8 விழுக்காடு வாக்குகள் கிடைத்தன. (அதேவேளை, முன்னர் மேற்குலகம் ''கோர்பி, கோர்பி'' எனத் தலையில் வைத்துக் கொண்டாடிய கோர்பச்சேவ் வெறுமனே 0. 5 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுப் படுதோல்வியடைந்தமை, மக்களின் மனநிலையைத் தெளிவாக்கியது ). எனவே, இவ்வாக்குப் பங்கீடு காரணமாக சுகானோவுக்குச் சேரும் என எதிர்பார்க்கப்பட்ட கணிசமான வாக்குகள் - உறுதி, கண்டிப்புடன் தோற்றமளித்த லெப்பெட்டிற்குச் சேர்ந்துவிட்டதாகக் கருதப்படுகின்றது. அத்தோடு, ஒருகாலத்தில் 'செஞ்சேனை' எனப் புகழ்பெற்று, இன்று சீரழிந்துபோய் - தகுந்த வேதனம், பராமரிப்பின்றி - நடுத்தெருவில் நிற்கும் ருஷ்ய இராணுவத்தினரிடையே லெப்பெட்டிற்கு மிகுந்த செல்வாக்குண்டு. அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 15 விழுக்காடு வாக்குகள் ருஷ்ய இராணுவ சமூகத்தைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவேதான், வேறு வழியின்றி, இறுதிநேரச் சூதாட்டமாக யெல்ட்சின், லெப்பெட் விதித்த நிபந்தனைகளையெல்லாம் ஏற்று - அவரை வளைத்துப் பிடித்து, மிகுந்த அதிகாரமுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமித்தார்; இதற்காக அதுவரை தம் ஆதரவாளராக இருந்த பலரையும் காவு கொடுத்தார். பதவி ஏற்ற கணமே லெப்பெட், தனது நீண்டகால எதிரிகளான - ருஷ்ய இராணுவத்தின் சீரழிவுக்கு காரணமாக இருந்தோர், செச்சென்யாவில் இராணுவத் தலையீட்டை ஏற்படுத்தியோர் என - 7 இற்கு மேற்பட்ட ஜெனரல்களை வீட்டிற்கு அனுப்பினார். அதற்கு முதலே, கடும்போக்காளரான பாதுகாப்பு அமைச்சரும் தனது நெருங்கிய நண்பருமான பாவெல் கிரச்சேவையே யெல்ட்சின் பதவி நீக்கினார். லெப்பெட் பதவி நீக்கியோரில், கே.ஜி பியின்மறு வடிவமான எவ்.ஐ. எஸ். எனப்படும் வெளிவிவகாரப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர், உயர் பாதுகாப்புத்துறை ஜெனரல்கள் என்போரும் உள்ளடங்குவர். தன்னை ஒரு சீர்திருத்தவாதியாக - ருஷ்ய தேசியவாதியாக - ருஷ்ய இராணுவத்தின் காப்பாளராக - காட்டிக்கொள்ளும் ஜெனரல் லெப்பெட், சிலியின் முன்னாள் இராணுவ சருவாதிகாரி ஜெனரல் பினோசெட்டின் விசுவாசி எனக் குறிப்பிடப்படுகின்றது. அடுத்தபடியாக இப்போது, ஊழல் நிறைந்த அமைச்சர்கள், அதிகாரிகளைப் பந்தாடப் போவதாகவும் - பாதாள உலகை ஒழித்துக்கட்டி, கட்டுப்பாடும் ஒழுங்கும் நிறைந்த ருஷ்யாவைக் கட்டியெழுப்ப 'புது இரத்தம்' பாய்ச்சப்போவதாகவும் லெப்பெட் பறைசாற்றியுள்ளார். எனவே, எதிர்காலத்தில் உண்மையான அதிகாரம் எவர்கையில் என்பதே, இப்போது எழும்பும் வினாவாகின்றது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மீண்டும் செச்சென்ய சிக்கல் எரிமலையாக வெடித்து - பூதமாக யெல்ட்சினைப் பின்தொடர்கின்றது. முன்னைய பாதுகாப்பு அமைச்சரும் இராணுவத்



அலெக்சாண்டர் லெப்பெட்: அடித்தது யோகம்!

திமிர் நிரம்பியவருமான பாவெல் கிரச்சேவின் கதையைக் கேட்டு செச்சென்யா மீது படையெடுத்த டிசெம்பர் 11,1994 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, புதைசேற்றுக்குள் கால்விட்ட நிலையில் யெல்ட்சினிருப்பதும்; செச்சென்யாப் போர் தொடர்ந்தால் தேர்தலில் தோல்வி நிச்சயம் என்கின்ற நிலையில், ''பயங்கரவாதிகள்'', ''கொள்ளைக்காரர்'' எனத் தானே கூறிய போராளிகளை மொஸ்கோவிற்கு அழைத்து - விருந்து வைத்து - போர் நிறுத்தம் கொண்டு வந்த கதையும் தெரிந்ததே. இப்போது மீண்டும் செச்சென்ய சிக்கல் மேலெழுகின்றது. ''குறிப்பிட்ட கால எல்லைக்குள் ருஷ்யப் படைகள் விலகாவிட்டால் மீண்டும் போர்'' என முழக்கமிடும் செச்சென்யாவின் தற்போதைய தலைவரான செலிம்கான் யண்டர்பியேவ், மோதுதற்குத் தயாராகின்றார். இப்போது லெப்பெட் என்ன செய்யப்போகிறார்? செச்சென்யாவில் இராணுவத் தலையீட்டைக் கண்டித்தும், வீணாக ருஷ்யப் படையினர் இறப்பதை அனுமதியேன் என்றும், செச்சென்ய சுதந்திரம் பற்றுக் கவனத்திற்கு எடுப்பேன் என்றும் இதுவரை கூறிய அவர், இனி என்ன செய்யப்போகிறார் என்பதே, உலக அரங்கில் எழுந்துள்ள கேள்வி. 'நரம்பு புதுத்' நிரம்பிய யெல்ட்சின் இனிமேல் லெப்பெட்டை எவ்வாறு கையாளுவார் என்பது, இன்னொரு கேள்வி. இந்தச் சிக்கலுக்கிடையில், புகழ்பூத்த பொதுவுடைமைப் புரட்சியின் 'மூத்த குடிகள்' எனப்பட்ட ருஷ்ய மக்கள், முடிவு தெரியாத - விடிவு தோன்றாத - புரட்சியொன்றில் மூழ்கியமக்களாகிவிட்டனர் என்பதே, இன்றைய ருஷ்யாவின் உண்மை நிலையாகும்!

# பொங்கியெழுந்தினிப் போராடுவோம்! எம்மூரில் வந்த பகைவிரட்டி வரலாற்றை வெல்வோம்!

## உலைக்களம்

- வியாசன்

பெரிய வாழ்வொன்றுக்கு அதிபதிகளாக
இருந்தோம் ஒருகாலம்.

பனிநீரில் குளித்தெழும் அதிகாலையாக
அழகாய் இருந்ததெம் ஊர்.

ஊரெல்லாம் திருவிழா
உறவெல்லாம் விநியுலா என்று
ஆயிரம் பேதங்கள் எமக்குள் இருந்தாலும்
அதற்குள்ளிருந்தது ஆனந்தம்.

இன்று எங்கேபோனது அந்த இனியவாழ்வு?

எவர்பறித்தார் எம் எழிலை?

தமிழா! கிடந்ததுபோதும் எழுந்து கேள்விகேள்.

எவர்பறித்தார் எம்வாழ்வையென்று
எட்டுத்திக்கும் எதிரொலிக்க
உரத்துகக்கள. உனக்கொரு பதில்வேண்டும்.

நாம் பிறந்தமண்ணில் நடக்கமுடியாது,
நிமிரமுடியாது,
பூக்க முடியாது,
புன்னகைக்க முடியாது.



யாரோ ஒருவரின் கட்டளைக்கு நடுங்கி
நரகத்தில் கிடந்துழலும் வாழ்வினி
என்று தொலையும்?
காற்றுக்கொதுங்கிய போர்த்துக்கீசனின்
கண்ணிலெம் தாயகம் தெரியும்வரை
தலையில் கட்டிய தலைப்பாகையை
முகில் தொட்டுப் போவதென
உயர்ந்த வாழ்வுக் குரியவராய் இருந்தோம் நாம்.

எம்மை நாமே எழுதினோம்.

வெடிமருந்துடன் வந்தவனை
வேலும், வாளும் வெல்லமுடியவில்லை.
வேற்றொருவனின் காலில விழுந்தோம்.

ஊற்றில் விழுந்த குங்குமச் சரையாய்
கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்தோம்.

யானைகள் மிதிக்கும் சேனைப் புலவாய்
மாறி மாறிப பலரின் மகுடத்தின் கீழ்
நாறிக்கிடந்தது நமவாழ்வு.

வெள்ளைக்காரன் வெளியேறியபோது
சேனநாயககாவுககு சிம்மாசனம் கிடைத்தது.

அன்று தொடங்கிய அவலம்
இன்றுவரை தொடர்கிறது.

ஆளபதிகள் மாறினர்
எஙகளுககு எநத மாற்றமும் எட்டவில்லை.

தமிழரின் வாழ்வைத் தணலிலிடுவதிலேயே
அவர்களின் அதிகாரப் போட்டி.
இப்போது சந்திரிகாவின் முறை

படைகளே ஆட்சிசெய்யும் அடக்குமுறை உச்சம்.

தமிழனே! அழுவதை நிறுத்து

உன்னை உள்ளுக்குள்ளேயே இழுத்திழுத்து
ஆமையாய் கிடந்தது போதும்.

மிதித்த இடத்துப் புல்லுச் சாகுமெனக்
குதிக்காதிருந்தாய். என்னநடந்தது?

'' நாளுமுன் ஊரினில் ஊரடங்கும் - உன்
நாய்களும் ஊமையாய் வாயடங்கும்
வாழுமுன் உரிமையும் போயடங்கும் - தமிழ்
வாசல்கள் யாவிலும் பேயுறங்கும். ''

கண்ணீர்விட்டு வளர்த்த விடுதலைப்பயிரை
கருகவிடலாமா?

குருதிசொரிந்து ஏற்றிய சுதந்திரக் கொடியை
எரியவிடலாமா?

பல்லாயிரம் பிள்ளைகளின் கல்லறைகள்
வெறும் புதைகுழியல்லவே.

கருத்தரிக்கும் கருவறையென்றல்லவா எழுதினோம்.

பொய்யாய், புனைகதையாய் மெல்ல, மெல்ல இருண்டு
இல்லாமற் போகுமா எம்வாழ்வு?

கலங்காதிரு மனமே!
என்ன நடந்துவிட்டது இப்போது?

நாளைக்கே உலகம் அழியுமென யார் தேதிகுறித்தது.

காற்றினி வீசாதென யார்சொன்னது.

நெஞ்சின் உறுதியும், நிமிரும் சக்தியும்
தொலைந்து போகாதிருக்கக் கடவது.

பல்லைக்கடித்துத் துயரைத்தாங்கு
பகற்பொழுது இனிமேற்தான் வரப்போகிறது.

துப்பாக்கிகளும், பீரங்கிகளும்
சுதந்திரதேவியைச் சுட்டெரிக்க முடியுமெனில்
உலகம் ஒரேநாடாகவல்லவா இருந்திருக்கும்.

அமெரிக்காவின் ஆயுதபலத்துக்குப் பணிந்திருந்தால்
வியட்னாம்நாடு விழிதிறந்திருக்க முடியாதே.

சுதந்திரத்தீயை சுட்டெரிக்க இன்னொரு நெருப்பில்லை

விடுதலையென்பது அடிவற்றிப்போகும் ஆற்றுநீரில்லை.

பிறிட்டுக் கிளம்பும் பூகம்பம்.

தெருவிற் கிடந்தெடுப்பது சமரசம்;
உயிர்கொடுத்து வாங்குவதே உரிமை.

போராட்டமே வாழ்வான பூமியில்
வாரோட்டம் எதற்கு?

விடுதலைப்போரென்பது தலைமுறைக்கான விலைகொடுப்பு

அடிமை வாழ்வை அறுத்து
நெடிய பனைபோன்ற நிமிர்ந்த வாழ்வுக்காக
உயிரைக் கொடுக்கும் ஒருவேள்வி.

நித்திரைக்கு இதுவல்ல நேரம்.

போராடும் தேசத்தில்
சாய்மனைக்கதிரைகளைத் தடைசெய்யவேண்டும்.

பாயையும், தலையணையையும் கொளுத்தலாம்... குற்றமல்ல

தாயாள் பசித்திருக்க
எமக்கு தங்கதநில நகையெதற்கு?

ஆடாதகாலும், அசையாத உடற்சதையும்
கூடாது தமிழனுககு.

குருதியிலே தமிழ் வீரம்
ஓடாததாய்க்குப பிறககாத தமிழ்மறவா!
பொங்கியெழுந்திங்கு புலியாகு

எம்மூரில்...
வந்தபகை துரத்தி வரலாற்றை வென்றெடுப்போம்.

'' விழிகள்திறந்து வெளியிற் பறந்து
வருக புலிகள் சேனையில்.
விடியும் அழகை விரைவிற் பருக
எழுக புலிகள் சேனையில்
தலைவன் காட்டும் வழியில் எழுந்து
வருக புலிகள் சேனையில்
தமிழர் தேசம் நிமிரும் நேரம்
எழுக புலிகள் சேனையில்! ''

## அரசுப் பொருளாதாரமும் குடும்பப் பொருளாதாரமும்

"இந்த ஆண்டு முடிவில் சுமார் ஒரு இலட்சம் பேர் தங்களது வேலைகளை இழப்பர்" என, சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அபாய அறிவிப்புச் செய்துள்ளார்.

அரசாங்கத்தைப் 'பதவியிறக்கும்' ஆசையுடன் - அதன் ஆட்சிவறுமையைச் சுட்டிக்காட்ட விரும்பும் ஒரு சாதாரண எதிர்க்கட்சியின் பேச்சாக மட்டும், இதை எடுக்க முடியாது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளாலும் மற்றும் அரசின் தனியார்மயமாக்கல் கொள்கைகளாலும், சிங்கள தேசத்தின் ஊழியர்கள் மேற்குறித்த அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்பது வெளிப்படை.

இதேவேளை, சந்திரிகா அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகர்களும், மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட சில அதியுயர் அதிகாரிகளும், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியின் அபாயம் பற்றி அரசிற்குப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிங்களப் பொருளியல் வல்லுநர்களின் இந்த அபாய அறிவிப்பை, 07.07.1996 ஆம் திகதிய சண்டேலீடர் பத்திரிகை, தனது தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்து முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது.

உலக வங்கி ஆலோசனை கூறியதுபோல, கோதுமை மாவினதும் உரத்தினதும் மானியத்தை நிறுத்தும்படியும், பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்களது நியமனங்களை உடனடியாக நிறுத்துமாறும் அவர்கள் அரசுக்கு எடுத்துக்கூறியுள்ளனர்.

இந்தப் பொருளியல் அறிஞர் குழுவில், ஜனாதிபதி சந்திரிகாவின் பொருளியல் ஆலோசகரான கலாநிதி லால் ஜெயவர்த்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஏ. எஸ் ஜெயவர்த்தன, மத்திய வங்கியின் ஆய்வுப் பிரிவுத் தலைவர் கலாநிதி எல். குணரட்ண என்போரும் அடங்கியுள்ளதாக 'சண்டேலீடர்' விபரம் வெளியிட்டுள்ளது.

### செய்தி ஆய்வு

போராலும் அதன் விளைவுகளாலுமே, சிங்கள அரசு இத்தகைய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்பது, அனைத்து நிபுணர்களதும் ஏகோபித்த கருத்தாகும்.

"போர் முடியாமல் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க முடியாது; அந்த அளவுக்கு அரசுக்கு பணநெருக்கடி உண்டு" என, அண்மையில், சந்திரிகா அம்மையாரும் அறிவிப்புச் செய்துள்ளார். அதேவேளை, "அடுத்த வருடத்துடன் போரை முடித்துவிடுவோம்" என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தையும் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் வைத்தபடி, வன்னியின் ஒருபகுதியையும் அரசுப் படைகள் கைப்பற்றினாலுங்கூட போர் முடியப் போவதில்லை. உண்மையில், போர் தீவிரம் பெறப்போகின்றது; அரசின் போர்ச் செலவும் உயரப்போகின்றது. அடுத்த வருட முடிவில், தாங்கொணா பொருளாதாரச் சுமையால் சிங்கள மக்கள் திணறப்போகின்றனர் என்பதே உண்மையாகும்.

அரசுப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாரிய நெருக்கடி காரணமாக, சாதாரண மக்களின் குடும்பப் பொருளாதாரமும் பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றது. பொருட்களின் விலையுயர்வு, போக்குவரத்துக் கட்டண உயர்வு என்பவற்றுக்கு மத்தியில சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. இதனால், மக்களின் வாழ்க்கைச் செலவு பெரியதொரு அதிகரிப்பைக் கண்டுள்ளது.

இந்த நிலையில், "இலவச உணவு விநியோகங்களை நிறுத்த வேண்டும், ஆசிரிய நியமனங்களை நிறுத்த வேண்டும்" என்ற வேண்டுகோள்கள், சிங்கள மக்களின் குடும்பப் பொருளாதாரத்திற்கு மேலும், அச்சுறுத்தல்களையே விடுத்துள்ளது.

உல்லாசப் பயணத்துறையில் பாரிய வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மனதில அச்சம், முதலிடுவதில் பின்னடிப்பு என்பனவற்றாலும் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இது அரசுப் பொருளாதாரத்திற்கு மேலும் பின்னடைவுகளைக் கொடுக்கப்போகின்றது.

அரசுப் பொருளாதாரம் பாதிக்கப்படும்போது, குடும்பப் பொருளாதாரம் சிக்கல்களைச் சந்திக்கும்; குடும்பப் பொருளாதாரத்தில் நிகழும் தாக்கங்கள் அரசியல் குழப்பங்களுக்கு வித்திடும் என்பது, உலக வரலாற்று அனுபவமாகும்! ○




## கூப்பன், உணவு முத்திரை, ஜனசவிய, சமுர்த்தி!

இலவச உணவு விநியோகம் என்ற விடயத்தை சிங்கள தேசத்தின் அரசியலிலிருந்து பிரிக்கமுடியாது என்ற அளவுக்கு, இரண்டும் ஒன்றாகக் கலந்துள்ளன.

ஆனால், புதிதுபுதிதாகப் பதவியேற்கும் அரசாங்கங்கள், அதற்கான பெயரைமட்டும் அடிக்கடி மாற்றிவருவதை அவதானிக்க முடியும்.

முன்னர் கூப்பன் என்றபெயரில் நடைபெற்று வந்த இலவச உணவு விநியோகம், ஜே. ஆர். பதவியேற்றதும் உணவு முத்திரை என்று பெயர் மாற்றம் பெற்றது. பின்னர் பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் அதற்கு, ஜனசவிய என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் இதை, சமுர்த்தி என அழைக்கின்றனர்.

பெயர்கள் மாறியிருந்தாலும் இலவச உணவு விநியோகம் என்ற கொள்கையை அனைத்து அரசாங்கங்களும் அமுல்படுத்தி வருகின்றன.

வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பதே இதன் நோக்கம் என, ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்; ஆனால், நிரந்தரத் தொழிலை அல்லது நிரந்தர வருமானத்திற்கான வழிவகைகளை மக்களுக்குச் செய்து கொடுப்பதே சிறந்தது என்பது, சமூகவியலாளர்களதும் பொருளியலாளர்களினதும் கருத்தாக உள்ளது.

ஒரு நாட்டினது சமூக - பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களது சொந்த முயற்சிகளும் கௌரவத்திற்கும் இத்தகைய இலவச விநியோக நடைமுறைகள் முட்டுக்கட்டையாக இருக்கும் என்பது, பெரும்பாலான அறிஞர்களது கருத்து. ஆனால், வாக்கு வேட்டைக்கான ஒரு சகதி வாய்ந்த ஆயுதமாக இதை அரசியல்வாதிகள் கருதுவதால, இன்றும் ஒருசில நாடுகளில் இது நடைமுறையில உள்ளது.

தற்போது சிறீலங்கா அரசு சந்திக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக, சந்திரிகா அரசாங்கத்துக்கு உலக வங்கி தெரிவித்துள்ள ஆலோசனைகளில, இலவச விநியோகங்களை நிறுத்திவிடுதல் என்பதும் அடங்கியுளளது.

ஆனால், மக்களின் எதிர்ப்பை இது சம்பாதித்துவிடும் என்ற அச்சம் அம்மையாரின் அரசாங்கத்துக்கு உள்ளது.

அம்மையாரின் அரசாங்கம் பதவியேற்ற பின்னர், 01.06.1995 அன்று, 'சமுர்த்தி' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

500 ரூபாவிற்குக் குறைந்த மாத வருமானம் பெறும் குடும்பங்களுக்கு, மாதாந்தம 1000 ரூபா உதவிப் பணம் வழங்கப்படும். அதுபோல, 500 - 1000 ரூபாவிற்கு இடைப்பட்ட மாதவருமானம் பெறும் குடும்பங்களுக்கு, மாதாந்தம 500 ரூபா இத்தத் திட்டத்தின்படி வழங்கப்படும்.

'சமுர்த்தி' திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, வடமாகாண மக்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில், சிங்கள - முஸ்லிம் மக்கள் மட்டும் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்; கிழக்குவாழ் தமிழா முற்றாகப் புறக்கணிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாணம் முழுவதும் தனது இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகச்சு, அரசாங்கம் நீண்டகாலமாகக் கூறிவருகின்றது. இன்று இதில உண்மையில்லை என்றாலுங்கூட, சமுர்த்தி திட்டம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் (01.06.1995), கிழக்கின் பெரும்பகுதி அரசின் கட்டுப்பாட்டில் இருநதது என்பது உண்மை. அந்த நிலையிலகூட தமிழ் மக்களை ஒதுக்கிவிட்டு, சிங்கள - முஸ்லிம் மக்களுக்குமட்டுமே உதவிப்பணம் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது, குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர், சமுர்த்தி திட்டத்தினை அங்கேயும் அமுல்படுத்தப்போவதாக சந்திரிகா அம்மையார் கூறியிருப்பது, வேடிக்கையாக உள்ளது; அத்துடன், சூழ்ச்சிகள் பல நிறைந்த அம்மையாரின் உள்நோக்கங்களையும், அந்த அறிவிப்பு புலப்படுத்துகின்றது! ○

## குடாநாட்டின் களநிலைமை

குடாநாட்டு மக்களின் "மனங்களை வெல்லும்" நாடகத்தின் நேரடி நடிகர்களான படையினர் இப்போது, தமது வேடங்களைக் கலைப்பதா விடுவதா என்ற குழப்பத்தில் உள்ளனர்!

அந்தளவுக்கு, குடாநாட்டின் களநிலைமையில் பெரும் மாறுதலுக்கான ஆரம்பம் தோன்றியுள்ளது.

"குடாநாட்டிற்குள் பெருமளவு புலிகள் ஊடுருவி - கெரில்லா செயற்பாடுகளை ஆரம்பித்துவிட்டனர்" என, சிங்களப் பத்திரிகைகள், அரசை நோக்கி விரக்திக் குரலெழுப்பி உள்ளன.

யாழ்நகரின் மத்தியில் நடந்த மனிதக் குண்டு வெடிப்பும் அதன் தாக்கங்களும், 'குடாநாட்டைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம்" என்ற பேரினவாதிகளின் நம்பிக்கைக்கு, பலத்த அடி ஒன்றைக் கொடுத்துவிட்டன.

தேசங்களை ஆக்கிரமித்துவிட்டு, அங்குள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளையும் - புன்சிரிப்பு வியாபாரத்தையும் - மற்றும் சில அரசியல் சித்து விளையாட்டுகளையும் செய்துகாட்டி, அந்த மக்கள் இனத்தை 'பேசாமடந்தைகளாக' மாற்றலாம் என்று, உலகின் சில அரசுகள் கருதுகின்றன. அதாவது, அரசியல் உணர்வற்ற வெறும் சோற்றுப் பிண்டங்கள்தான் மக்கள் என, அவை எண்ணுகின்றன.

தமிழினமும் இவ்வாறான ஒரு மக்கள் கூட்டம்தான் என சிங்களப் பேரினவாதமும் கருதுகிறதுபோல் தோன்றுகின்றது; அதனால் தான், அரசியல் உரிமைகளுக்கான தமிழ் மக்களின் போராட்டத்தை நிவாரண உதவி என்ற சலுகையால் தோற்கடித்துவிடலாம் என்று கருதிச் செயற்பட்டு, இப்போது ஏமாற்றத்தின் ஆரம்பத்தில் இருக்கின்றது.

இதேவேளை, தமது நிர்வாகத்தை குடாநாட்டில் ஏற்படுத்தி "போராட்டத்தை ஒடுக்கல்", "வெளிநாட்டு உதவிகளைப் பெறல்" என்ற 'ஒருகல்லில் இரு மாங்காய்'த் திட்டமும் நடைமுறைப்படுத்த முடியாத ஒன்றாக மாறிவருவதையும், அரசு உணரத் தொடங்கியுள்ளது.

அத்துடன், "சிங்கள தேசத்தின் தலைநகரையே தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க முடியாது திணறும் அரசுப் படைகள், புலிகளின் கோட்டையான குடாநாட்டில் எங்ஙனம் தப்பிப் பிழைக்கப்போகின்றன" என, இராணுவ விமர்சகர் கேள்வி எழுப்புகின்றனர்.

குடாநாட்டின் குடிசார் - புவியியல் அமைப்பு, கெரில்லா நடவடிக்கைகளுக்கு துணை செய்யக்கூடியசாதகத் தன்மைகளையே கொண்டு விளங்குகின்றது. அதனால்தான், முன்னரும், கெரில்லாப்போர் அங்கே வளர்ந்து இருந்தது. கிட்டத்தட்ட 6 வருடங்களின் பின் இப்போது, மீண்டும் அங்கே கெரில்லா நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப் புலிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். புலிகளின் 20 வருட கெரில்லாப்போர் அனுபவம், குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகளுக்கு, பேரழிவுகளையே உண்டுபண்ணப்போகின்றது! ○


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு
தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு
தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# வஞ்சிக்கப்பட்ட தமிழர் : வாக்குறுதிகளும் சூழ்ச்சிகளும் !

(முந்திய இதழ்த் தொடர்ச்சி)

தமிழரின் மொழியுரிமை சம்பந்தமாக வாக்குறுதியை மீறியதுடனேயே சிங்களவர்களின் பிரதான கட்சிகளின் வஞ்சகம் தெளிவாகியது. இதன் பின்பும் தமிழ்த் தலைவர்கள், ஐக்கியத்தின் பொருட்டும் சமாதானத்தின் பொருட்டும் சிங்களத் தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்வதில் ஈடுபட்டனர். 1957 இல் பண்டாரநாயக்கா, எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். ஆனால் இவ் ஒப்பந்தத்தை பண்டாரநாயக்கா ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தார். இதன் பின்பு பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் கீழ், 1958 இல், பாரிய இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. இதுபற்றிய விபரங்களை தார்சி வித்தாச்சி என்ற சிங்களப் பத்திரிகையாளர், EMERGENCY '58 என்ற நூலில் விபரமாகப் பின்வருமாறு தந்துள்ளார்.

1956 இல் தனிச்சிங்கள மசோதாவை பண்டாரநாயக்கா சமர்ப்பித்தவேளை, கல்லோயாவில் சிங்களக் குடியேற்றவாசிகளால் 156 தமிழ் விவசாயிகள் வெட்டிக் கொல்லப்பட்டபோது அதைப் பார்த்துக்கொண்டிருந்த பண்டாரநாயக்கா, 58 இல் இனப்படுகொலையின்போதும் அவ்வாறே நடந்துகொண்டதாக, தார்சி வித்தாச்சி வர்ணித்துள்ளார். தமிழர்கள் வெட்டியும் உயிருடன் தீ வைத்தும் கொல்லப்பட்டவேளை - தீவு முழுவதும் தமிழரின் சொத்துக்களும் உயிர்களும் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை - நான்கு நாட்கள் கழிந்த பின்பும், அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துமாறு பிரதமர் பண்டாரநாயக்காவிடம் சில கொழும்புவாழ் தமிழ்ப் பிரமுகர்கள் கோரியபோது, ''இது ஒரு அற்ப விடயம்; இதைப் பெரிதுபடுத்தாதீர்கள்'' என்று தட்டிக்கழித்தார். மொத்தத்தில் இவ்வினப்படுகொலையைப் பார்த்து தார்சி வித்தாச்சி, பின்வருமாறு தனது நூலை முடிக்கிறார். ''நாம் (இரு இனங்களும்) பிரிந்து போகும் நிலைக்கு வந்துவிட்டோமா? சிந்திக்கும் ஆற்றல் உடையவர்கள் நம்புகிறார்கள் - ஆம் அப்படித்தான் என்று.''

13) 1947இற்கும் 1972 இற்கும் இடைப்பட்டகாலத்தில் நடைமுறையிலிருந்த அரசியல் அமைப்பை உருவாக்கிய சோல்பரி, 1963 இல் ஒரு நூலின் முன்னுரையில், ''டி. எஸ். சேனநாயக்கா உயிருடன் இருந்திருப்பாரேயானால் 1958 இல் நிகழ்ந்த இனப்படுகொலை போன்றதொரு துயரநிலை இலங்கையில் ஏற்பட்டிருக்க முடியாது'' என்றும், ''தூரதிருஷ்டியற்ற சிங்களத் தலைவர்கள், தமது தேர்தல் வெற்றிக்காக இன மொழி மத உணர்வுகளைத் தூண்டியுள்ளனர்'' என்றும் கூறியுள்ளதுடன், ''இலங்கையின் அரசியற் போக்கு எனக்கும், அரசியல் யாப்பை உருவாக்கிய எனது நண்பர்களுக்கும் ஏமாற்றமாகப் போய்விட்டது'' என்றும் கூறியுள்ளார்.

மேலும், டி. எஸ். சேனநாயக்கா மீது நம்பிக்கை வைத்ததால்தான் தானும் தனது நண்பர்களும் மேற்படி அரசியல் அமைப்பை உருவாக்கியதாகவும், அதற்காக தற்சமயம் வேதனைப்படுவதாகவும் கூறியுள்ளார். [Soulbury, ''Foreword'', B.H. Famer, Ceylon: A Divided Nation, London, 1963]

தனது அரசியல் அமைப்புப் பிழையென்பதை அதை உருவாக்கிய வெள்ளையரே உணர்ந்திருந்ததை இது தெளிவுபடுத்துகின்றது.

14) 1965 இல், செல்வநாயகம் பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்தாராயினும், பின்பு டட்லியினால் அது முற்றிலும் கைவிடப்பட்டது.

15) ''நான் இலகுவில் வாக்குறுதியளிக்க மாட்டேன், அப்படி அளித்தால் அதை நிறைவேற்றுவதில் ஒருபோதும் பின் நிற்கமாட்டேன்'' என்று, 1966 இல் டட்லி சேனநாயக்கா கூறினாராயினும், அவர் 1968 இல், டட்லி - செல்வா ஒப்பந்தத்தை அப்படியே கைவிட்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

16) 1966 இல் இடதுசாரிகள் நடத்திய மேதின ஊர்வலத்தில், தமிழரை ''தோசை, மசால வடை'' என்று கிண்டல் செய்து கோஷமெழுப்பினர்.

17) 1972 இல் அரசியல் யாப்பை எழுதிய கொல்வின் ஆர். டி. சில்வா, முந்திய சோல்பரி அரசியல் அமைப்பில் - பெயரளவிலாவது காணப்பட்ட - சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு 'சம்பந்தப்பட்ட 29 ஆவது சரத்தை நீக்கினார்; அத்தோடு, தனிச் சிங்களச் சட்டத்தை அரசியல் அமைப்பு விதியுமாக்கினார். மேலும், நவீன வரலாற்றில் முதன்முறையாக பௌத்தத்தை அரசு மதமாக்கினார். இவையெல்லாம் இடதுசாரிகளின் அப்பட்டமான துரோகங்களாகும்.

*மு. திருநாவுக்கரசு*

18) 1977 இல் ஜே. ஆர். பதவிக்கு வந்து சில மாதங்களில், நாடு தழுவிய ரீதியில் தமிழருக்கெதிரான இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. படுகொலை நிகழ்ந்துகொண்டிருந்த வேளை, ஜே. ஆர். நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், ''போரா சமாதானமா?'' என்று கேட்டார். இது கண்டி மன்னன் விமலதர்மசூரியன் டச்சுத்தளபதிக்கு அனுப்பிய செய்தியாகும். இதையே நவீன காலத்தில் தமிழர்களுக்கெதிராகச் சொன்ன ஜே.ஆர். ''இவ்வாறு நான் சொல்லவில்லை; சிங்கள மக்கள் சொல்கிறார்கள்'' என்றும் கூறினார்; இது வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.

[ஹன்சார்ட், 1977 ஒகஸ்ட் 18, சி. சி 242 - 246]

19) ஜே. ஆரின் முக்கிய அமைச்சர்களுள் ஒருவரான லலித் அத்துலத்முதலியை அவருடைய ஒக்ஸ்ஃவோட் பல்கலைக்கழகத்து சகாவாகிய டேவிட் செல்போர்ன் 1982 இல் சந்தித்தபோது, ''தமிழர்களின் பிரச்சினைக்கு என்ன தீர்வு காணப் போகிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு லலித் கூறிய பதில், ''தமிழர்களின் தலைகளை நொருக்கப்போகிறோம்.''


[David Selbourne, ''David Selbourne Rides Again'', Saturday Review 10. 08. 1985]

20) 1983 யூலையில் ஜே. ஆரின் ஆட்சியில், இலங்கை முன்னெப்பொழுதிலும் கண்டிராத

*1958 இல் தமிழர்கள் வெட்டியும் உயிருடன் தீ வைத்தும் கொல்லப்பட்டவேளை - தீவு முழுவதும் தமிழரின் சொத்துக்களும் உயிர்களும் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்தவேளை - நான்கு நாட்கள் கழிந்த பின்பும், அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துமாறு பிரதமர் பண்டாரநாயக்காவிடம் சில கொழும்புவாழ் தமிழ்ப் பிரமுகர்கள் கோரியபோது, "இது ஒரு அற்ப விடயம்; இதைப் பெரிதுபடுத்தாதீர்கள்'' என்று தட்டிக்கழித்தார்.*

**1994 இல், 'த சண்டேலீடர்' பத்திரிகைக்கு டிக்சிற் அளித்த பேட்டியில், ஒப்பந்தத்திற்கு முதலில் காலை வாரியது சிங்களவர்களே என்று கூறியிருந்தார்.**



தமிழ் இனப்படுகொலை நடந்தது. இதில் தமிழர்கள் அநாதரவாகக் கொல்லப்பட்டனர்; அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இப் பெரும் இனப்படுகொலையின் துயரத்தை சிங்கள எழுத்தாளரான எல். பியதாஸ என்பவர் Holocaust and After என்ற நூலில் விபரமாகத் தந்துள்ளார். குறிப்பாக, சிரேஷ்ட அமைச்சர் காமினி திசநாயக்கா, இனப்படுகொலையை தலைமைதாங்கி நடத்தியதுபற்றி இந்நூல் தெளிவாக விபரித்துள்ளது. [ பக். 83 - 84 ]

இக்கலவரத்தின் பின்பு ஜே.ஆரைச் சந்தித்த பத்திரிகையாளரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், ''யாழ்ப்பாணத்தவரின் உயிர்களைப் பற்றியோ அவர்கள் எம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியோ எமக்குக் கவலை இல்லை'' என்று, பொறுப்பான ஜனாதிபதி பதவியிலிருந்த அவர்,வெளிப்படையாகவே கூறினார். [ சண்டே ஒப்சேவர், ஆடி 17, 1984 ]

21) உள்நாட்டில் தமிழ்த் தலைவர்களைச் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றியதன் பின்பு, இந்திய அரசுடன் ஒரு கபடத்தனமான ஒப்பந்தத்தில், 1987 இல், ஜே. ஆர். கைச்சாத்திட்டார். அந்த ஒப்பந்தத்தைக் குழப்புவதில் சிங்களவர் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். விடுதலைப் புலிகளின் தளபதிகள் சிலரைக் கடலில் கைதுசெய்து அவர்களைக் கொழும்புக்குக் கொண்டுவருமாறு வலித் நிர்ப்பந்தித்தார். இது ஒப்பந்தத்தைக் குழப்பும் வகையில் நிலைமைகளைத் தூண்டுமென்றும், இதனால், புலிகள் இந்தியப்படைகளுடன் மோதும் நிலை தோன்றும் என்றும் எதிர்பார்த்துத்தான் தான் இவ்வாறு நடந்துகொண்டதாக, அத்துலத்முதலி, புரூஸ் போலிங் என்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார். [ Bruce Palling, '' An Independent View From London'', The Sunday Times, 02. 05. 1993, Reproduced from Independent (London) ]

**''யாழ்ப்பாணத்தவரின் உயிர்களைப்பற்றியோ அவர்கள் எம்மைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பது பற்றியோ எமக்குக் கவலை இல்லை.''**

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரான அத்துலத்முதலியும் அவர் அங்கம் வகித்த ஜே. ஆர்.அரசாங்கமும், எப்படிக் கபடத்தனமாக ஒப்பந்தத்தைச் செய்து பின்னர் அணுவணுவாகத் திட்டமிட்டு - இறுதியில் அதை முறித்துக் கொண்டனர் என்பதை, இது தெளிவாகக் காட்டுகிறது.

22) 1994 இல் 'த சண்டேலீடர்' பத்திரிகைக்கு டிக்சிற் அளித்த பேட்டியில், ஒப்பந்தத்திற்கு முதலில் காலை வாரியது சிங்களவர்களே என்று கூறியிருந்தார் '' ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டிருந்த அந்தஸ்தை நடைமுறைப்படுத்துவதில், அரசாங்கம் வீணாக காலதாமதம் காட்டியது. அரசாங்கம் எதையும் நடைமுறைப் படுத்த விருப்பாமல், தேவையற்ற உரையாடல்களில் ஈடுபட்டிருந்தது. கைதுசெய்யப் பட்டிருந்த 17 விடுதலைப் புலி ஆளையூர்களையும் கொழும்புக்குக் கொண்டுவர வேண்டுமென்று லலித் வற்புறுத்தியதே, புலிகள் ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கக் காரணமாய் அமைந்தது'' என்று, அவர் மேலும் கூறியிருந்தார். ['த சண்டே லீடர்', புரட்டாதி 04, 1994 ]

23) ஜே. ஆர். பதவியிலிருந்து இறங்கி வீட்டில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் காலத்தில், பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி வருமாறு.

கேள்வி: இந்தக் கட்டத்தில் வடக்குக் கிழக்குப் பிரச்சனைக்கான மிகச்சிறந்த தீர்வு எதுவென நீங்கள் உணர்கிறீர்கள்?

பதில்: அது சமஷ்டி முறைதான்.

கேள்வி: நீங்கள் ஜனாதிபதியாக இருந்த போது ஏன் அதைச் செய்யவில்லை?

பதில்: அந்தநேரத்தில் மக்கள் சமஷ்டிக்குத் தயாராக இருக்கவில்லை.

இவ்வாறு கபடத்தனமான முறையில் சிங்களத் தலைவர்கள், காலத்துக்குக் காலம் தமிழர்களை வஞ்சித்திருக்கிறார்கள். இந்த வகையில், தனது வாக்குறுதிகளால் உலகை ஏமாற்றும் முயற்சியில் - முன்னைய சிங்களத் தலைவர்களை விடவும் - அதிகம் மெருகு பெற்ற நவ இனவாதியாக, சந்திரிகா செயற்படுகின்றார்! ○

# இனி ஒருபோதும்...

சிங்களப் பேரினவாதத்தின் கொடூரத்தை அதிகளவில் சந்தித்தது மட்டக்களப்புப் பிராந்தியம். அங்குள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரு துயர காவியத்திற்குச் சொந்தக்காரர்களாக இருப்பர். தாசனின் குடும்பமும் அங்கேதான் வாழ்ந்து வந்தது. செங்கலடி அந்தக் குடும்பத்தின் தொட்டில். அக்குடும்பத்தில் மொத்தம் ஆறு பேர்.



தாசனின் தந்தை கடற்தொழில் செய்யும் ஒரு கூலித் தொழிலாளி. மணலில் புதைந்த வண்டியை இழுப்பதைப் போல, தனது குடும்ப வண்டியை இழுக்க அவர் படாதபாடுபட்டார். கடலுக்குப் போகும் யாராவது ஒருவருடன் சென்று திரும்பி வரும்போது நாற்பது, ஐம்பது ரூபாவைக் கொண்டுவருவார். அதில்தான் அந்தக் குடும்பம் வயிறு கழுவும்.

தாசன், குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. குடும்ப வறுமையைப் போக்க இரவில் யாருடனாவது வலை இழுக்கச் செல்வான். ஒருநாள் தந்தைக்குக் கடும் காய்ச்சல் வந்துவிட்டது; அதனால், கடலுக்கு அவர் போகவில்லை. குடும்பத்தின் வயிற்றைக்கழுவியது உப்புக் கஞ்சிதான்.

வழமைபோல இரவு தாசன் வலை இழுக்கச் சென்றுவிட்டான். தாசனின் அக்கா பெயர் மஞ்சு. இவர்களது குடிசையில் படுத்துறங்க இடவசதியின்மையால், பக்கத்திலுள்ள உறவினர் வீட்டுக்கு மஞ்சு அக்கா செல்வது வழமை.

அன்றும் அப்படித்தான் நடந்தது. இரவு நடுவயதை எட்டியது. அந்தக் கிராமத்தில் எஞ்சியிருந்த சில நாய்கள் ஓலமிடத் தொடங்கிவிட்டன. மூடிய கண்களுடன் அக்கிராம மக்கள் விழித்திருந்தனர். தாசனின் சிறு குடிசை இராணுவத்திற்கு இரையாகியது. யானையின் காலின் கீழ் அகப்பட்ட முளைக்கீரை போல குடிசை உருக்குலைந்தது. சுகயீனமாய்க் கிடந்த தந்தை,பட்டினியுடன் கிடந்த தாய், தங்கை மற்றும் தம்பி ஆகியோர் ஒரு நொடியில், கொடியோரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகிவிட்டனர். விடியமுன் எமகாதகர்கள் சென்றுவிட்டனர். விடிந்ததும் மஞ்சு அக்கா ஓடிவந்தாள். விழுந்து கதறினாள் - மண்ணில புரண்டாள்; மயங்கி - பின் எழுந்து அலறினாள்; உறவுகளும் துடித்துக் கதறின.

கடலிலிருந்து வந்துகொண்டிருந்த தாசனுக்கு இச் சத்தங்கள் திகைப்பையும் அச்சத்தையும் கொடுத்தன. வீட்டை அணுகியதும் அது துயரமாகவேமாறிவிட்டது: தாசனைக் கண்ட மஞ்சு அக்கா கட்டிப் பிடித்துக் கதறினாள். மிஞ்சியிருந்த அந்தக் குடும்பத்தின் இரு விழுதுகளும் ஒன்றின்மீது ஒன்று புரண்டு அழுதன. தங்கச்சி செத்துக்கிடந்த கோலம், தாசனை விம்மி விம்மி அழச் செய்தது.

நாட்கள் ஊர்ந்தன. வலை இழுத்துவாங்கும காசை அக்காவிடம் கொடுத்து வந்தான் தாசன். ஒரு நாள் தாசனை அருகில் இருத்திவிட்டு அக்கா சொன்னாள்- ''தம்பி! நான் இயக்கத்துக்குப் போகப் போறன்___'' என்று கூறி முடிக்குமுன், தம்பி சொன்னான்: ''அக்கா நீ நில்; நான் போறன்.'' ஆனால, சொல்லியவாறே அடுத்த நாள், அக்கா இயக்கத்துக்குப் போய்விட்டாள்.

தாசன் தனிமரமானான். கடலும் - குடிசையும் அவனது உலகமாகியது. இரண்டு ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. தாசனும் இயக்கத்திற்கு வந்துவிட்டான். தாசனின் இப்போதைய பெயர் தனராஜ். தளபதி 'கருணா'வின் பணிப்பின் பேரில் மட்டக்களப்பில் இருந்து வந்து, மணலாற்றில் துப்பாக்கியுடன் நின்றான்.

அப்போது காட்டுக்குள் பெரிய சமர் நடந்துகொண்டிருந்தது. ஒரு நாள், காட்டின் ஓர் ஓரத்தில் தனராஜ் காவல் கடமையில் இருக்கும்போது, ''என்னைத் தெரியுமா?'' என ஒரு பெண் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்த தனராஜ் திகைத்துப் போய்விட்டான். '' அக்கா '' என வாய் விட்டுக் கூப்பிட்டான். '' ஆமி முன்னேறிக் கொண்டிருக்கிறான்.நாங்கள் மறுக ஆறுதலாய்க் கதைப்பம் '' என்றாள் அக்கா. தனராஜின் குழுவுக்கும் இன்னொரு பக்கத்தால் முன்னேறித் தாக்கும்படி, கட்டளை வந்தது. காட்டுச் சமர் தொடங்கியது. இருபக்கத்துத் துப்பாக்கிகளும் உமிழ்ந்தன: எறிகுண்டுகள் இடையில் விழுந்து முழங்கின. எறிகுண்டின் சிதறல் ஒன்று தனராஜின் கை ஒன்றைத் துண்டித்தது. மருத்துவ வசதிக்காக தனராஜ் சமர் முனைக்குப் பின்னால் கொண்டு செல்லப்பட்டான்.

காயமடைந்த இன்னும் சில போராளிகளுடன் அங்கே தனராஜ் இருந்தான். அருகில், வீரச்சாவடைந்த போராளிகளது வித்துடல்கள் துணியால் மூடிவைக்கப்பட்டிருந்தன. ''பெண் போராளிகளது வித்துடலகள் சிலவும் இதில் இருக்கின்றன'' என்று சொன்ன இன்னொரு போராளி, தனராஜின் மூளைக்குள் எரிமலையை வெடிக்கச் செய்த இன்னொரு செய்தியையும் சொன்னான். ஓடிச்சென்ற தனராஜ் பெண் போராளிகளது வித்துடல்களை மூடியிருந்த துணிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். அதிலொன்றைத் திறந்தபோது ...... ''அக்கா'' என்று மெதுவாக விம்மினான்.

'' 'சண்டைமுடிய சந்திப்பம்' என்றாயே, இனி ஒருபொழுதுமே சந்திக்க முடியாதே! ''

- நர்மதன் ○

# ஸ்ரான்லி வீதிக் குண்டு சொல்கின்ற செய்தி!

**1996** - யூலை - 4 ஆம் நாள், மதியம் 12. 50 மணியளவில், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நடந்த சம்பவத்துக்குப் பின்பு - ''எமது அரசியல் இராணுவ வெற்றிகளைப் பயங்கரவாதிகளால் சீர்குலைத்துவிட முடியாது'' என அமைச்சர் மங்கள சமரவீர அறிக்கையிட்டுள்ள போதிலும் -

அந்த மனிதக்குண்டுத் தாக்குதல், யாழ் குடாநாடு மீதான சந்திரிகா அரசாங்கத்தின் சூழ்ச்சிகரக் கையாளலுக்கு முதலாவதும், தாக்கமுள்ளதுமான ஒரு அடியேதான்!

குண்டுச் சிதறல்கள் தமக்குரிய அரசியல் - இராணுவ நோக்கங்களை நிறைவேற்றிவிட்டன என்பதற்கு ஆதாரம், தாக்கப்பட்ட இலக்குகளாகும்.

'புனர்நிர்மாணப் பொறி' வைத்து, யாழ்ப்பாண மக்களை 'அணைத்துக்கெடுக்கும்' நவீன இனவாதத் திட்டத்தின் அமுலாக்கலுக்குப் பொறுப்பானவர்தான், அமைச்சர் நிமல் சிறீபால டீ சில்வா. அவரது துணைவர்களான-

வடக்குப் ''புனரமைப்புக்கு''(?) பொறுப்பாக நியமிக்கப்பட்ட - முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி - கார்லேல் டயஸ், சந்திரிகா அரசாங்கத்தின் வெற்றிக்காக தேர்தல் காலங்களில் அயராது உழைத்த - சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் - ரஞ்சித் கொடமுதுனே, சந்திரிகா கட்சியின் தீவிர ஆதரவாளரான - கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகக் குழு அதிகாரி - ஏ. ஏ. தசநாயக்க எனப்படுவோர்தான் இயக்குநர்கள். இவர்களோடிணைந்த அடுத்தவர் ஒரு இராணுவக்காரர்.

அவர்தான் மேஜர் ஜெனரல் ஆனந்த எஸ். எஸ். ஹமன்கொட. யாழ்ப்பாணத் தளபதியாகவும் நியமிக்கப்பட்ட அவர்தான், இந்தக் கதையின் சிறப்புக் கதாநாயகன். சாதுரியமாகவும், புத்திக்கூர்மையுடனும், மிகக் கவனத்துடனும் அரங்கேற்றப்படும் இந்த வஞ்சக நாடகத்தில் முக்கிய பாத்திரம் அவருக்குத்தான். குடாநாட்டில் இராணுவ - அரசியல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து, ஒன்றுக்கு ஒன்றைத் துணையாக்கி, கூட்டு நடவடிக்கைகளை நகர்த்திச் சென்று, ''மக்களின் மனங்களை வெல்லும்'' பொறுப்பு அவருடையது.

***யாழ்ப்பாணத் தளபதியாகவும் நியமிக்கப்பட்ட ஆனந்த எஸ். எஸ். ஹமன்கொடதான் இந்தக்கதையின் சிறப்புக் கதாநாயகன். சாதுரியமாகவும், புத்திக்கூர்மையுடனும், மிகக் கவனத்துடனும் அரங்கேற்றப்படும் இந்த வஞ்சக நாடகத்தில் முக்கிய பாத்திரம் அவருக்குத்தான். குடாநாட்டில் இராணுவ – அரசியல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து, ஒன்றுக்கு ஒன்றைத் துணையாக்கி, கூட்டு நடவடிக்கைகளை நகர்த்திச் சென்று, ''மக்களின் மனங்களை வெல்லும்'' பொறுப்பு அவருடையது.***

***அந்த மனிதக்குண்டுத் தாக்குதல், யாழ் குடாநாடு மீதான சந்திரிகா அரசாங்கத்தின் சூழ்ச்சிகரக் கையாளலுக்கு முதலாவதும், தாக்கமுள்ளதுமான ஒரு அடியேதான்!***

***குண்டுச் சிதறல்கள் தமக்குரிய அரசியல் – இராணுவ நோக்கங்களை நிறைவேற்றிவிட்டன என்பதற்கு ஆதாரம், தாக்கப்பட்ட இலக்குகளாகும்.***

குருநாகலையைச் சேர்ந்த அந்த 46 வயது 'இளைஞர்', 26 வருட இராணுவ சேவையாளர். தியத்தலாவ இராணுவக் கல்லூரியில் 'ஆட்டிலறி'ப் போதகராக, 'ஆட்டிலறி'ப் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளராக, 4 ஆவது 'ஆட்டிலறி' றெஜிமென்டின் தளபதியாக, வவுனியா மாவட்ட 'பிரிகேட்' படையணியின் பொறுப்பதிகாரியாக, இராணுவத் தலைமையகத்தின் துணைச் செயலாளராக என உயர் பணிகளில் சேவையாற்றியதற்காக மட்டுமன்றி -

கடந்த நொவெம்பர் 15 இல் பதவியுயர்வு பெறுவதற்கு முன்னர், கேணல் தரத்தில் இருக்கும்போதே பிரிகேடியர் தரத் தளபதிக்குரிய பணியேற்று, ''சூரியப்பிரகாசம் - 1'' படையெடுப்பின்போது 'ஆட்டிலறி'ப் பிரிவின் கட்டளை அதிகாரியாக ஆற்றிய சிறந்த சேவைக்காகவும் -

''உத்தம சேவா பதக்கம'', ''வடமராட்சி பதக்கம'', ''பூரணபூமி பதக்கம'' ஆகிய படைத்துறை விருதுகளை ஏற்கெனவே பெற்றிருந்தவர் அவர்.

இவ்வாறாக, தமிழர்களுக்கு எதிரான நீண்ட இனவாதப் போரில் இன்றியமையாத கடமைகளைச் செய்துவந்த மேஜர் ஜெனரல் ஹமன்கொட -

வடபகுதியின், புனருத்தாரண அமைச்சரின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர் என்பதுடன், ''தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக'' - புனர்வாழ்வளிக்கும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். இத்தகைய நியமனத்தினை வழங்கி, டென்சில் கொப்பேகடுவ இல்லாத இடத்திற்குப் பிரதியீடாக அரசியற் களத்தில் இறக்கப்படும் அளவிற்கு அவரது பின்னணி என்னவெனில், ஒரு இராணுவக்காரராக மட்டுமன்றி, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்காரராகவும் அவர் இருந்தார் என்பதுதான் என நம்பலாம்.

எனவே -

உண்மையில் அந்த மனிதக்குண்டுத் தாக்குதலானது, தீர்க்கமான சில எச்சரிக்கைகளை சிங்கள அரசாங்கத்திற்கு விடுத்துத்தான் உள்ளது.

பறிக்கப்பட்ட - மறுக்கப்பட்ட - தமது அடிப்படையான அரசியல் உரிமைகளை, தன்னாட்சி அதிகாரங்களை மீளப்பெறுவதற்காக - அளப்பரிய அர்ப்பணிப்புகள் புரிந்து, சொல்லொணாத் துயரங்களைக் கடந்து - உறுதிப்பாடு குன்றாத - ஒரு சுதந்திரப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும், தேசிய இன அந்தஸ்துடைய ஒரு மக்கள் சமூகத்தை -

வெறும் சலுகைகளால் மூழ்கடிப்பதன்மூலம் போலி மாயைக்குள் திரையிடுத்து, அவசரத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் அரசியல் உரிமைகளின் அடிப்படைக் கோரிக்கைகளை மறக்கடித்து, இதன் வாயிலாக- அற்ப அன்றாடத் தேவைகளுக்காக மட்டுமே போராடிய வெறும் மக்கள் குழு என்று உலகின் முன் காட்டி - தமிழினத்தை - எதிர்காலம் சூன்யமாக்கப்பட்ட நிரந்தரமான அரசியல் அடிமையாக்கிவிடக் கனவு காணும் சிங்களப் பேரினவாதிகளுக்கும், சிங்களத் தனித்துவத்தை நிலைநிறுத்துவதற்காக அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள சூழ்ச்சிகரமான புதியவகை இனவாதச் செயற்பாட்டுக்கும் கொடுக்கப்பட்ட, காத்திரமான அடியேயாகும். அந்தக் குண்டுத் தாக்குதலின் அரசியற் பரிமாணங்கள் இன்னும் விரிந்து, பின்வருமாறு வருகின்றன.

95இன் ஏப்ரில் 19இற்கு முன்னான நாட்களையும், 96இன் ஏப்ரில் 19இற்குப் பின்னான நாட்களையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதொன்றே, சந்திரிகா அரசாங்கத்தின் பேரினவாத - வஞ்சக - அரசியலைப் புலப்படுத்துவதாக அமையும். சுருக்கமாக நான்கு வரிகளுக்குள் தெளிவாகச் சொல்லிவிடக்கூடிய அந்தக் கபடத்தனத்திற்கு, நீண்ட விளக்கமெதுவும் தேவையில்லை.

சந்திரிகா அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த அன்றைய நாட்களில், நான்காண்டு காலமாக ஆகக்கூடிய துன்பங்களை அனுபவித்துவிட்ட மக்களை ஆசுவாசப்படுத்துவதற்காக- அவர்களது அவசர அன்றாடத் தேவைகளை முதலில் பூர்த்திசெய்துவிட்டு, பின்பு அடிப்படை அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேசலாம் என்று, புலிகள் இயக்கம் நியாயமாகக் கோரியது. அதனை நிராகரித்து, அரசியல் சிக்கல்களைப் பற்றிப் பேசவே அவசரப்பட்டு, பேச்சுக்களை முறிக்கச் செய்யும் விதமாகச் செயற்பட்டு, மீண்டும் போர் வெடிக்க வழிகோலியது அரசுதான் என்பதை, அன்று சர்வதேசசமூகம்கண்டுகொள்ளவில்லை. ஆனால், அதே அரசின் இன்றைய செயற்பாடுகள் விசித்திரமாக வல்லவா உள்ளன! யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளை அப்புறப்படுத்தி, மண்ணையும் மக்களையும் தான் கைப்பற்றிவிட்டதையடுத்து, இப்போது, அடிப்படைப் பிரச்சினைகளை ஆறப்போட்டுவிட்டு - அவசரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கே அது அவசரப்படுகின்றது. ''பாவம் தமிழ் மக்கள்; அவர்கள் இப்போது அரசியல் தீர்வுகள் குறித்து அக்கறைப்படவில்லை; அவர்கள் பட்டுநிற்கின்ற துன்பங்களுக்குப் பரிகாரம் தேடுவது எமக்குரிய முதற்கடமை; புனர்நிர்மாண வேலைகளை உடனடியாகக் குடாநாட்டில் செய்து - அவர்களது நாளாந்த வாழ்வை முதலில் சீரமைக்க வேண்டும்'' என்றவாறாக அக்கறையோடு அவதிப்படுகின்ற அரசு, ஓராண்டு இடைவெளிக்குள், யாழ்ப்பாண மக்கள் தொடர்பான தன் நிலைப்பாட்டைத் தலைகீழாய் மாற்றி - சூழ்ச்சிகர வலை விரித்து நிற்கிறது.

எனவேதான், குடாநாட்டின் இத்தகைய கபடத்தனமான அரசியற் சூழலில் நிகழ்ந்த மனிதக்குண்டுத் தாக்குதலானது -

தமிழர்க்கு எது எது தேவை என்பதைத் தானே நிர்மானித்து, அவையும் எப்போது எப்போதுதேவை என்பதையும் தானே நிர்மானித்து, தமிழர்களின் விருப்பு வெறுப்புக்களையும் தானே நிர்மானித்து: தமிழர்கள் அரசியல் பிரச்சினைகள் பற்றி அக்கறைப்படவில்லை - அவர்கட்கு அன்றாடப் பிரச்சினைகளே உள்ளன என்பதையும் தானே நிர்மானித்து, முடிவாக, வெறும் மின்சாரத்திற்கும், 'சதொச' வில் விற்கும் மிதிவண்டி ரயருக்கும், 'கொக்கோகோலா' பானத்திற்காகவும் மாத்திரமே போராடிய மக்கள் - அவர்கட்கு அரசியல பிரச்சினைகளே இல்லை என்ற தீர்மானத்தையும் தானே தீர்மானிக்கக்கூடிய விதமாகச் செயற்படுகின்ற -

மிகச் சாதுரியமான பேரினவாத அரசியலை இலக்கு வைத்து, இத்தகைய தீர்மானங்களுக்குரிய அரசியல் அநாதை நிலைக்கு தமிழ்த் தேசிய இனத்தைக் கொண்டுவரும் பணியேற்றுள்ள ''புனருத்தாரண'' குழு மீது மேறகொள்ளப்பட்ட அச்சுறுத்தலான தண்டனையுமாகும்.

இத்தருணத்தில்தான் ஒரு விடயம் ஐயமறத் தெளிவாகின்றது.

இப்போது தங்கள் முன் இன்முகங்காட்டித் தொண்டாற்றி நிற்பது, இதுவரையும் தம்மை அடக்குமுறைக்குள் வைத்திருந்த ஒரு அந்நியப் படை என்பதையும் -

அந்தப் படையைக் கொண்டு வஞ்சக நாடகமாடி நிற்பது, தமக்கு ஒருபோதுமே நீதி வழங்க மாட்டாத சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கமும், அவர்களைக்கொண்ட அரசாங்கமுமே என்பதையும் தமிழ் மக்கள் எப்போதுமே மறந்துவிடாத நிலையில் -

எந்த மக்களைத் தனது படைகள் மீட்டெடுத்ததாக அரசாங்கம் இப்போது பிரச்சாரங்களைச் செய்கின்றதோ, அந்த மக்களிடமிருந்தே தன் படைகளை நாளை மீட்டெடுக்க முடியாமல், அது அவதிப்படப்போகின்றது! ○

***தமிழர்க்கு எது எது தேவை என்பதைத் தானே தீர்மானித்து, அவையும் எப்போது எப்போது தேவை என்பதையும் தானே தீர்மானித்து, தமிழர்களின் விருப்பு வெறுப்புக்களையும் தானே தீர்மானித்து: வெறும் மின்சாரத்திற்கும், 'சதொச'வில் விற்கும் மிதிவண்டி ரயருக்கும், 'கொக்கோகோலா' பானத்திற்காகவும் மாத்திரமே போராடிய மக்கள் – அவர்கட்கு அரசியல் பிரச்சினைகளே இல்லை என்ற தீர்மானத்தையும் தானே தீர்மானிக்கக்கூடிய விதமாகச் செயற்படுகின்றது அரசு.***

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்